







srilanka

WONDER OF ASIA



# வருடாந்த அறிக்கை 2013

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

பொருளாதார அபிவிருத்தி அமைச்ச

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

# வருடாந்த அறிக்கை - 2013

Invest in Sri Lanka Tourism

Sri Lanka Tourism
Development Authority

நவம்பர் 26, 2013

**பக்கம்**

அறிமுகம்

நோக்கு மற்றும் பணிக்கூற்று

கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

தலைவரின் வாழ்த்துச் செய்தி

நிலையியற் சபைத் தகவல்கள்

நிலையியற் சபை நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

இலங்கை சுற்றுலா பிரயாணிகளின் வருகை

சுற்றுலா திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

சுற்றுலா முதலீடு

பொதுநலவாய சபை மாநாடு – 2013

உள்நாட்டு சுற்றுலா மற்றும் விடுதி நிருவாகம்

தரம் மற்றும் தரப்பாதுகாப்பு

உபசரணை இல்லப்பணிகள்

மானிட வள மற்றும் வளாக முகாமைத்துவம்

தகவல் தொழில்நுட்பம்

உள்ளகக் கணக்காய்வு

நிதி முகாமைத்துவம்

சட்ட ரீதியான செயற்பாடுகள்

1. **அறிமுகம்**

2013ம் ஆண்டின் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையின் எமது இலக்காக அமைந்தது 1,200,000 க்கு அப்பால் 1,274,593 எண்ணிக்கையாகும். இதற்கமைய சுற்றுலா வர்த்தகத்தின் மூலம் 2013ம் ஆண்டில் பெறப்பட்ட வருமானம் 1.45 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இவ்வெற்றிக்காக நாடு பூராகவும் காணப்படும் நிலையான சமாதானம் பாரிய கவர்ச்சி மிக்கதாக அமைந்ததுடன் விசேடமாக நாடடின் சுற்றுலாவிற்காக அபிவிருத்தியுடன் கூடிய சூழலை உருவாக்கும் வியூகங்களை பொருத்தமான முறையில் வகுத்தல் மற்றும் இலங்கை பிரவேசத்தில் உள்ள புதிய சந்தை வாய்ப்புக்கள் ஊடாக வெளி சுற்றுலா செயற்பாட்டு முறைகளை மாற்றியமைப்பதன் மூலம் இலங்கையில் சுற்றுலா பிரயாணிகளுக்கிடையே மிகக் கவர்ச்சி மிக்க கேந்திர நிலையமாக மாற்றமடைந்துள்ளது.

சகல சுற்றுலாப் பிரயாணிகளுக்கும் இலங்கை தொடர்பான நேர் மனப்பாங்கு மிக்க கவர்ச்சியினை வழங்கும் நோக்குடன் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை சுற்றுலா துறையில் முழுமையான தரங்களை சர்வதேச தரத்திற்கு முன்னெடுத்துச் சென்று அபிவிருத்திப் பணிகள் மற்றும் தரங்களை சமகாலப்படுத்தும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகள் அதன் உள்ளீட்டுத் திட்டங்கள் மற்றும் தற்போது நிரந்தரமாக காணப்படும் சமாதான சூழலுக்கமைய இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்காக சமாதானம் மிகுந்த நாடாக சித்தரித்துக் காட்ட இயலுமையினைக் கருத்தில் கொண்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 05 ஆண்டு திட்டங்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணிகளுக்காக முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாண்டில் உபசரணை இல்ல வேலைத்திட்டம் சுற்றுலா சிறிய மற்றும் நடுத்தரளவு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஊடாக அறிமுகப்படுத்தி பிரச்சாரம் செய்யப்பட்டது அதற்கமைய இவ்வேலைத்திட்டங்களுக்கு கூடுதலான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுலில் உள்ள திவிநெகும வேலைத்திட்டத்திற்கு இணைவான வேலைத்திட்டமாகும். இச்சகல வேலைத்திட்டங்களின் இலக்கு சுற்றுலாத் துறையின் மூலம் கிடைக்கும் வருமானத்தை பொருளாதார மட்டத்திற்குக் கொண்டு செல்வதாகும்.

2. **நோக்கு**

இலங்கையில் கானப்படம் கவர்ச்சி மிக்க சரையோரம் மற்றம் அதனுடன் இணைந்த இயற்கை வளங்கள் நட்புறவு ரீதியிலான உபசரஹை மிக்க மக்கள் மற்றம் எமது கலாச்சார ஒற்றுமைகளுடன் சுற்றுலா பிரயாணிகளுக்காக நாம் மன்வைக்கம் வெலைத்திட்டங்களின் ஊடாக ஆசியாவின் முண்ணனி சுற்றுலா தளம் மற்றம் பசுமையான தேசமாக மாற்றியமைப்பத எமது எதிர்கால நோக்காகும் இலங்கையில் மேற்கூறப்பட்ட நோக்கங்களை எட்டுவதற்காக ஆசியாவின் சுற்றுலா பிரயாணிகளை ஒரே கொடியின் கழிழ் கொண்டு வரவத கணழிசமான அண்ணிய நாட்டு செலவணியனை சுற்றலா கைத்தொழில் ஊடாக பெற்றுக் கொள”வதற்காக இதன் பெறுபேறுகளை இலங்கையின் சுற்றலா துறையின் பய்நாகாளர்கள் மற்றம் மக்களிடையே பகிர்வதற்கும தெவையான செயற்பாடுகள் மெ்றகொள்ள வேண்டி உள்ளது.

**பணிக்கூற்று**

எமது சுற்றுலா வாடிக்கையாளர்கள் (உள்நாடு மற்றும் சர்வதேச) ரீதியில் மிகவும் மகிழ்ச்சிக்கு உட்படத்தவதற்கான செயற்பாடுகள் மற்றும் இலங்கை தொடர்பில் அவர்களது மனக் குளிர்சிசயினையும் கவர்ச்சியினையும் விருத்தி செய்தல்.

## *கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி*



அரச நோக்கிற்கமைய நாட்டின் சமாதானத்தை உருவாக்கியதன் பின்னர் நாட்டில் சுபீட்சம் மிக்க அபிவிருத்திக்குத் தேவையான அடிக்கல் நடப்பட்டதன் பின்னர் தற்போது இதன் பெறுபேறுகள் கிடைக்கப்பெறுகின்றன. இதற்கமைய சுற்றுலாத் துறையில் என்றும் இல்லாதவாறு உருவாகியுள்ள கணிசமான முன்னேற்றத்தின் ஊடாக 26.7% வருடாந்த அதிகரிப்பு மற்றும் 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் அன்னிய நாட்டுச் செலாவணியை பெற்றுக் கொள்ளவும் உள்நாட்டில் 06 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு சுற்றுலா பிரயாணங்களை மேற்கொள்ள வசதிகளை ஏற்படுத்தி கொடுத்ததன் மூலம் 46 மில்லியன் மொத்த தேசிய உற்பத்தியுடன் இணைக்கப்படுவதன் மூலம் 2016ம் ஆண்டளவில் உரிய இலக்கை எட்ட முடியும் என்பது எனது பாரிய நம்பிக்கையாகும். சுற்றுலா பிரயாணிகளின் வருகையினை 2.5 மில்லியன் மற்றும் 2.2 பில்லியன் அமெரிக்க டொலர் உழைக்க சுற்றுலா வர்த்தகத்தின் மூலம் இலகுவில் எட்ட முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியுடன் இணைத்து கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ள திவிநெகும வேலைத்திட்டத்தின் ஊடாக திருப்திகரமான பங்கேற்பு இவ்விரு பிரிவுகளுக்கும் கிடைக்கின்றன.

2013ம் ஆண்டில் 2578 அறைகளை நிர்மானிப்பதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்கமைய நிர்மானிக்கப்படும் மொத்த அறைகளின் எண்ணிக்கை 8954 வரை அதிகரித்துள்ளது. உள்நாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகளின் அதிகரிப்பிற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் பாரிய பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பயன்மிக்க மீள்கட்டமைப்பு செயற்பாடுகளுடன் 2014ம் ஆண்டு சுற்றுலா துறையில் தெளிவான முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

சுற்றுலா துறையில் தரம் மற்றும் இலக்கினை நிவர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகள் ஊடாக சுற்றுலா வர்த்தகம் நாளுக்கு நாள் பலம் அடைந்து இலங்கையை ஆச்சரியமிக்கதாக மாற்றியமைக்க தேவையான சக்தி எம்மிடம் இருப்பது என்பது எமது நம்பிக்கையாகும்.

**பசில் ராஜபக்ஷ**
**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்**

## *தலைவரின் வாழ்த்துச் செய்தி*



அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் துணிச்சல் மிக்க தலைமைத்துவம் மற்றும் ஆசிர்வாதத்துடன் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் உட்பட தேவையான முகாமைத்துவத்துடனும் கலாநிதி பீ.பீ. ஜெயசுந்தர அவர்களின் பங்களிப்புடனும் 2013ம் ஆண்டு அதிசிறந்த அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா பிரயாணிகளின் வருகை 1,274,594 அதாவது எமது இலக்கான 1.2 மில்லியனைத் தாண்டி சாதனை மிகுந்த சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை மற்றும் உள்நாட்டு சுற்றுலா பிரயாணிகளின் 6 மில்லியன் மக்கள் சுற்றுலாவுடன் இலங்கை சுற்றுலாத் துறை ஒளிமயமான வெற்றிகளை எட்டிய ஆண்டாக இவ்வாண்டை கருத முடியும்.

கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் யோசனைக்கமைய நாட்டின் பொருளாதார பயன்களை கிராமிய மக்களுக்கும் வழங்கும் நோக்குடன் திவிநெகும வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்திற்காக இலங்கை சுற்றுலாத் துறையில் கணிசமான பங்கேற்பு காணப்படுவதுடன் சிறிய மற்றும் நடுத்தரளவு சுற்றுலாத் துறை, சுற்றுலா உபசரணை இல்ல வேலைத்திட்டங்கள், சுற்றுலா உட்கட்டமைப்பு வசதி விருத்தியின் ஊடாக 2013ம் ஆண்டில் சுற்றுலா துறையைப் போன்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு பாரிய முன்னேற்றங்களை எட்டிய ஆண்டாக குறிப்பிட முடியும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் 2013 ஒக்டேபர் மாதம் இடம்பெற்ற பொதுநலவாய அரச தலைவரிகளின் உச்சு மாநாட்டை வெற்றிகரமாக்குவதற்காக அதற்காக இடம்பெற்ற கண்காட்சி “இலங்கையின் புத்தெழுச்சிக்காக” பாரிய பங்குகள் ஆற்றப்பட்டன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலாத் துறையின் அறைகளின் கொள்ளளவினை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திக்காக கணிசமான பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதிகார சபையின் செயற்பாட்டுத் திட்டங்களிளை மீள அமைத்து மிகுந்த நெகிழ்வுத் தன்மையுடன் சுற்றுலாத் துறையின் வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரியின் ஊடாக சுற்றுலாத் துறையில் 965 நிறுவனங்களுக்கு உரியதாக 2012ம் ஆண்டில் 400 மில்லியன் ரூபா வருமானத்தை 800 மில்லியன் ரூபா வரை கூடுதலான அளவு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடிந்தது.

2014 – 2017 இலங்கை சுற்றுலா இணக்கப்பாட்டுத் திட்டங்களுக்கமைய சுற்றுலாத் துறையின் மொத்த பிரதி இலாபங்களை இலங்கை மக்களுக்கு பெற்றுத்தருவதற்கு நாட்டின் சமூக பெறுமதிகள் மற்றும் சூழல் சமநிலைக்குப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு சுற்றுலாக் கொள்கையினை அமுல்படுத்துவதன் ஊடாக மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் 2016ம் ஆண்டில் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமிக்க தேசமாக மாற்றியமைக்கும் பயணத்தின் போது சுற்றுலாத் துறையின் பிரதி இலாபங்களை உயர்ந்த பட்சம் வழங்க முடியும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

3. **நிலையியற் சபை தகவல்கள்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை இலங்கையின் பிரதான சேவை வழங்கும் நிறுவனம் என்பதுடன் சுற்றுலாத் துறை பிரதான பொருளாதார அபிவிருத்தியினை பிரதி நிதித்துவப்படுத்தக் கூடிய நிறுவனமாகும். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பங்குடமை நவீன மயப்படுத்தல்கள் மற்றும் அதிஉயரிய செயற்பாடு ஊடாக இலங்கையில் பிரதான செயற்பாட்டாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பெயர்**
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**சட்ட ரீதியிலான கோட்பாடு**
2005 இலக்கம் 38 கொண்ட இலங்கை சுற்றுலா சட்டத்தின் கீழ் சட்டமாக்கப்பட்ட நிலையியற் சபையாகும்.

**பிரதான அலுவலகத்தின் முகவரி**
இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03.

**தேசிய விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள இடங்கள்**
பாசிக்குடா, குச்சவெளி, கற்பிட்டி, பென்தொட்ட, கிரித்தலை, பொலன்நறுவை மற்றும் ஜால

**உள்நாட்டு விடுமுறை விடுதிகள் அமைந்துள்ள இடங்கள்**
அநுராதபுரம், பண்டாரவெல, பென்தொட்ட, கதிர்காமம் மற்றும் நுவரெலியா

**கணக்காய்வாளர்**
இலங்கை கணக்காய்வாளர் அதிபதி

**வங்கியாளர்**
இலங்கை வங்கி

**2013ம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபை**

1. திரு. பாஸ்வர சேனாங்க குணரட்ன - தவைலர்
2. திரு. ஈ.எம்.எஸ்பீ. ஏக்கநாயக்க / அங்கத்தவர் # 2013.01.09ம் திகதி தொடக்கம் 2013.08.13
3. திரு. ஆர் . சேரசிங்க # 2013.08.17ம் திகதி தொடக்கம்
4. திரு. ஆர்.ஏ.ஏ.கே. றனவக்க / அங்கத்தவர்
5. திரு. கிரான் குரே / அங்கத்தவர்
6. திரு. சந்திரா விக்ரமசிங்க / அங்கத்தவர்

**சிரேஷ்ட முகாமைத்துவ சபை**

| பிரிவு | பதவி | பெயர் |
| --- | --- | --- |
| பணிப்பாளர் நாயக அலுவலகம் | பதில் பணிப்பாளர் நாயகம் 2013 மார்ச் 12 வரை<br><br>பணிப்பாளர் நாயகம் 2013 மார்ச் 13 தொடக்கம் | திரு. விபுல வனிகசேகர<br><br>கலாநிதி டீ.எஸ். ஜயவீர |
| ஆராய்ச்சி மற்றும் சர்வதேச இணைப்புக்கள் | பணிப்பாளர் | திரு. எம். பீ. கிரியல்ல |
| சுற்றுலா, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி / One Stop பிரிவு | பணிப்பாளர் | திரு. பீ.யூ. ரட்நாயக்க |
| உள்நாட்டு சுற்றுலா மற்றும் விடுதி நிருவாகம் | பணிப்பாளர் 2013 ஜுலை 1ம் திகதி வரை<br><br>பதில் பணிப்பாளர் 2013 ஜுலை 02ம் திகதி தொடக்கம் | திரு. எம். யூ. லியனஆரச்சி<br><br>திரு. டி.பீ. நந்தன |
| மானிட வள மற்றும் சூழல் முகாமைத்துவம் | பதில் பணிப்பாளர் 2013 ஜுலை 02ம் திகதி வரை<br><br>பணிப்பாளர் 2013 ஜுலை 02ம் திகதி தொடக்கம் | திரு. எம். யூ. லியனஆரச்சி<br><br>திரு. எம். யூ. லியனஆரச்சி |
| தர மற்றும் தரப்பாதுகாப்பு | பதில் பணிப்பாளர் 2013 ஒக்டேபர் 28ம் திகதி வரை<br><br>பணிப்பாளர் 2013 ஒக்டேபர் 28ம் திகதி வரை | திரு. எம்.பீ. கிரியல்ல<br><br>திரு. ரஞ்சித் பண்டார |
| நிதி முகாமைத்துவம் | பணிப்பாளர் | திரு. டீ.பீ. நந்தன |
| தகவல் தொழில்நுட்ப தொடர்பு சாதன | பணிப்பாளர் | திரு. உதான விக்ரமசிங்க |
| உள்ளக கணக்காய்வு பிரிவு | உள்ளக கணக்காய்வாளர் | திருமதி. பசந்தி ஜெயசிங்க |
| சட்டம் | சட்ட உத்தியோகத்தர் | திருமதி. இனோகா புஞ்சிகேவா |
| சுற்றுலா பொலிசார் | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் / பணிப்பாளர் / நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் | திரு. என்.ரீ. எதிரிசிங்க / நிலையப் பொறுப்பாளர் |

## 6. நிலையியற் சபை நோக்கங்கள் மற்றும் இலக்கு

| இலக்கம் | வகைப்படுத்தல் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|
| 1 | சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | 1,600,000 | 2,000,000 | 2,500,000 |
| 2 | நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் | 425,450 | 517,722 | 600,000 |
| 3 | அறை கொள்ளளவு | 35,880 | 42,840 | 50,000 |
| 4 | அந்நிய நாட்டு செலாவணி உழைப்பு அ.டொ. மில்லியன் | 1740 | 2120 | 2,750 |
| 5 | பொதுவாக சுற்றுலாப் பிரயாணிகள் தங்கியிருக்கும் நாட்களின் எண்ணிக்கை | 7.7 | 7.4 | 7.0 |
| 6 | சுற்றுலாப் பிரயாணிகள் நாளொன்றிற்கு நாட்டில் மேற்கொள்ளும் செலவினம் அ.டொ | 117.5 | 124.3 | 130.0 |

## 7. முழுமையான வீயூக செயற்பாடுகள்

சுற்றுலாக் கைத்தொழிலுக்காக உதவக்கூடிய சூழலை கட்டியெழுப்புதல்.

புதிய சந்தை மற்றும் நேரடி சந்தைகளை கவர்ச்சிக்கு உட்படுத்தலும் சமா்ப்பித்தலும்.

இலங்கையில் கடத்தும் காலத்திற்குள் சகல சுற்றுலா பிரயாணிகளும் மகிழ்ச்சியுடன் இருப்பதனை உறுதிப்படுத்தல்.

இலங்கை தொடா்பில் திருப்தி கரமான சிந்தனையினை உலகெங்கும் பரப்புவதற்கு நோ்மனப்பாங்கு மிக்க சிந்தனைகளை விருத்தி செய்தல்.

இலங்கைக்கு வருகை தரும் சகல சுற்றுலா பிரயாணிகளும் எமது நாட்டில் இருக்கும் காலத்திற்குள் மகிழ்ச்சியுடன் இருந்தாக உறுதிப்படுத்துவதற்கான அளவீட்டினை தயாரிப்பது உள்நாட்டுச் சுற்றுலா ஊக்குவிப்பிற்கு மேலே குறிப்பிடப்பட்டவாறு 2011 - 2016 பங்கேற்ற சுற்றுலா வியூக திட்டங்களுக்கமைய சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையினை அதிகரிப்பது மாத்திரமன்றி நாட்டில் நாம் இலக்காகக் கொண்டுள்ளவாறு சுற்றுலாப் பிரயாணிகளை வரவழைப்பதே நோக்கமாகும். சகல நாடுகளிலும் விற்பனை வேலைத்திட்டங்கள் மற்றும் இலக்காகக் கொண்ட சந்தைகளை இனங்காண்பதற்காக அந்நாடுகளில் ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதற்கமைய இலங்கை சுற்றுலா சம்ரதாய சந்தைகளில் மாத்திரம் நிலைத்து நிற்பதில்லை.

## 1. சுற்றுலா பிரயாணிகளின் வருகை

2013ம் ஆண்டில் ஒரு மில்லியனைத் தாண்டி சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை 1,274,593 என பதிவாகியுள்ளதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கை சுற்றுலாப் பிரயாண வரலாற்றின் இதுவரையில் பதிவாகிய அதிஉயரிய எண்ணிக்கை இதுவாகும். மேலும் 2013ம் ஆண்டில் எமது இலக்காக உள்ள சுற்றுலா பிரயாணிகளின் வருகை 1,200,000 ஆகும். இவ் எண்ணிக்கையையும் தாண்டிச் சென்று கடந்த ஆண்டு சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையின் அளவு 1,005,605 உடன் கருத்தில் கொள்மே போது 26.7% அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா பிரயாணிகளின் வருகை மாதாந்த அடிப்படையில்**
2012 - 2013

| மாதம் | 2012 | 2013 | ூ மாங்கும் |
|---|---|---|---|
| ஜவனரி | 85,874 | 110,543 | 28.7 |
| பெப்ரவரி | 83,549 | 113,968 | 36.4 |
| மார்ச் | 91,102 | 113,208 | 24.3 |
| ஏப்ரல் | 69,591 | 80,737 | 16.0 |
| மே | 57,506 | 74,838 | 30.1 |
| ஜூன் | 65,245 | 90,279 | 38.4 |
| ஜூலை | 90,338 | 107,016 | 18.5 |
| ஓகஸ்ட் | 79,456 | 123,269 | 55.1 |
| செப்ரெம்பர் | 71,111 | 90,339 | 27.0 |
| ஒக்டோபர் | 80,379 | 107,058 | 33.2 |
| நவம்பர் | 109,202 | 109,420 | 0.2 |
| டிசம்பர் | 122,252 | 153,918 | 25.9 |
| மொத்தம் | 1,005,605 | 1,274,593 | 26.7 |

**2013ம் ஆண்டில் கூடுதலான சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை**

**பதிவாகிய 15 நாடுகளின் பெயர்கள்**

| இடம் | நாடு | 2013 |
|---|---|---|
| 1 | இந்தியா | 208,795 |
| 2 | ஐக்கிய இராட்சியம் | 137,416 |
| 3 | ஜேர்மன் | 85,470 |
| 4 | மாலைதீவு | 79,474 |
| 5 | பிரான்ஸ் | 64,388 |
| 6 | சீனா | 54,288 |
| 7 | அவுஸ்திரேலியா | 54,252 |
| 8 | ரஷ்யா | 51,235 |
| 9 | யுக்ரேன் | 38,607 |
| 10 | ஐக்கிய அமேரிக்க இராட்சியம் | 34,690 |
| 11 | ஜப்பான் | 31,505 |
| 12 | கனடா | 30,926 |
| 13 | பாக்கிஸ்தான் | 25,336 |
| 14 | சவுதி அரேபியா | 23,753 |
| 15 | நெதர்லாந்து | 22,281 |

**2013 ஜுலை 29ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 2ம் திகதி வரை இடம் பெற்ற சுற்றுலா பிரதேச எண்ணிக்கை கணக்குகள் தொடர்பான செயற்பட்டறை**

சுற்றுலாப் பிராந்தியக் கணக்கு (TSA) எண்ணிக்கைக் கணக்கு கோட்பாடு என்பதுடன் சுற்றுலா சேவை பொருள் நுகர்வோர் சேவை சர்வதேச தரத்தில் அளவீடு செய்யும் பிரதான முறையாக கருத முடியும். இதற்கமைய சுற்றுலாத் துறை மற்றும் அச்சேவைகளை நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது வகைப்படுத்துவதற்கு இனங்காண்பதற்கு இம்முறைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முழுமையான பிரதேச சுற்றுலாக் கணக்கு முறைகள் சுற்றுலாத் துறையுடன் ஏனைய கைத்தொழில் வேலைவாய்ப்புச் சுற்றுலா துறைக்குரிய மேலதிக விடயங்களும் இதனுடன் இணைத்துக் கொள்ள முடியும். இதற்கமைய சுற்றுலா பிரதேச கணக்கு முறையினை தயாரிப்பதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, மத்திய வங்கி, குடிசன புள்ளி விபரவியல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுலாப் பிராந்தியக் கணக்கு முறைமையினை வகுப்பதனைத் துரிதப்படுத்தல் மற்றும் அதனை இலங்கையில் அமுல்படுத்தும் பலம் பொருந்திய நிறுவனமாக கருத முடியும். இதற்கமைய ஐக்கிய இராட்சியத்தின் உலக சுற்றுலா அமைப்பினால் தொழில்நுட்ப உதவிக்குரிய பயிற்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இச் செயலமர்வு 2013 ஜுலை 28ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 2ம் திகதி வரை நடாத்தப்பட்டதுடன் குடிசன புள்ளி விபரவியல் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் இவ்வேலைத்திட்டங்களுக்கு பங்களிப்பு செய்ததுடன் அதற்கமைய பிரதேச சுற்றுலாக் கணக்கு முறைமை இலங்கையில் அமுல்படுத்தப்பட்டது.

 

**விமான நிலைய ஆய்வு # இலங்கையின் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் புறப்பட்டு செல்லும் போது**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஆராய்ச்சி மற்றும் சா்வதேச இணைப்புப் பிரிவினால் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் சுற்றுலா பிரயாணிகள் தொடா்பாக 2013 ஆண்டு பூராகவும் ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இவ் ஆய்வுகளில் சா்வதேச சுற்றுலா பிரயாணிகளின் மாதிரி வகைப்படுத்தல்கள் 2க்கு உட்படுத்தப்பட்டன. அவ்வாறாயின் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டல்கள் என வகைப்படுத்தப்பட்டன. இதற்கமைய சுற்றுலாப் பிரயாணிகள் மற்றும் பல்வேறு பட்ட பயிற்சிகள் பெற்ற பயிற்சிக் குழுக்கள் மூலம் 2708 சுற்றுலா பிரயாணிகள் நோ்காணலில் கலந்து கொண்டனா்.

இம் மாநாட்டின் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத் துறையில் அரச மற்றும் தனியாா் துறையின் முகாமைத்துவத்தைத் தீா்மானிப்பதன் மூலம் சுற்றுலாத் துறையினை திட்டமிடல், ஊக்குவிப்பு, விற்பனை மற்றும் மிகவும் பயன்மிக்க சந்தைகள் எவை என்பது தொடா்பிலும் தீா்மானிக்கப்படுகின்றன. இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக அமைவது 2013ம் ஆண்டு ஜனவரி – டிசம்பா் வரை இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பிரயாணிகளின் தனிப்பட்ட மற்றும் பௌதீக புள்ளி விபரங்களை ஆய்விற்கு உட்படுத்துவதாகும். இதற்கமைய 18 சுற்றுலா குழுக்கள் இவ் ஆய்வினைப் பிரதிநிதித்துவப் படுத்தினா். அவையாவன பிருத்தானியா, ஜோ்மன், இந்தியா, பிரான்ஸ், ஸ்கென்டினேவியா, அவுஸ்திரேலியா, ரஷ்யா, மத்திய கிழக்கு, யுக்ரேன், பெனலக்ஸ், சிங்கப்பூா், அமெரிக்க ஐக்கிய இராட்சியம், சுவிா்சலாந்து, சீனா, இத்தாலி, ஜப்பான், கனடா மற்றும் மலேசியா.

2013 ஜனவரி - டிசம்பா் வரை இவ் ஆய்வில் நோ் காணலுக்காக உட்படுத்தப்பட்ட சுற்றுலாப் பிரயாணிகளின் விபரங்கள கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| நாடு | | நோ்காணலுக்காக உட்படுத்தப்பட்ட சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெரிய பிருத்தானியா | 1019 |
| 2 | இந்தியா | 812 |
| 3 | ஜோ்மன் | 525 |
| 4 | பிரான்ஸ் | 356 |
| 5 | மத்திய கிழக்கு | 279 |
| 6 | அவுஸ்திரேலியா | 268 |
| 7 | பெனலக்ஸ் | 163 |

| | | |
|---|---|---|
| **8** | ஸ்கன்டினேவியா | 160 |
| **9** | ரஷ்யா | 157 |
| **10** | யுக்ரேன் | 138 |
| **11** | ஐக்கிய அமெரிக்கா | 111 |
| **12** | சீனா | 106 |
| **13** | ஜப்பான் | 99 |
| **14** | சிங்கப்பூர் | 97 |
| **15** | இத்தாலி | 78 |
| **16** | சுவிர்சலாந்து | 73 |
| **17** | கனடா | 57 |
| **18** | மலேசியா | 45 |
| **19** | ஏனையவை | 621 |
| **மொத்தம்** | | **5164** |

**சர்வதேச இணைப்புக்கள்**

**புரிந்துணர்வு உடன்படிக்கை**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் சர்வதேச இணைப்புப் பிரிவினால் சுற்றுலாத் துறையினை விருத்தி செய்வதற்காக தேவையான அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்களை ஆண்டுக்குள் பெற்றுக் கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

1. இலங்கை அரசு மற்றும் ஹொங்கோ ஜனநாயக அரசிற்கிடையில் சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்புக்களை விருத்தி செய்தல்.
2. மாலைதீவு அரசாங்கம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கிடையில் சுற்றுலாத் துறையினை மேம்படுத்தும் உடன்படிக்கை.
3. சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை சுவிர்சலாந்து அரசாங்கம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கிடையில்.
4. சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்காக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் தாய்லாந்து அரசிக்கிடையிலான ஒத்துழைப்பு உடன்படிக்கை.
5. சோசலிச உகண்டா இராட்சியம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கிடையிலான ஒத்துழைப்பு உடன்படிக்கை.
6. கொரியக் குடியரசு மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கிடையில் சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை.
7. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் சீசெல்ஸ் குடியரசிற்கிடையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை.
8. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் சிங்கப்பூர் அரசிக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை.

**<u>ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பு கிழக்காசிய பசுபிக் வலயத்தின் 25 வது இணைப்புக் கூட்டம் / தெற்காசிய நீடித்த நிலையான சுற்றுலா அபிவிருத்தி ஹைதராபாத் - இந்தியா 2013 ஏப்ரல் 12 – 14.</u>**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டத்தில் நிலையியற் சபை தேர்தல்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் இதற்கமைய ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பிற்குரிய அங்கத்துவ நாடுகள் மற்றும் பிராந்திய நாடுகளில் அமுலில் உள்ள வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் விரிவான அடிப்படையில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டன. இதற்கமைய ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பின் நிலையான சுற்றுலா அபிவிருத்தித் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற மாநாட்டில் இலங்கைக் குழு மேற்பார்வையாளராக பங்கேற்றது.





**சுற்றுலா திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி**

***(1) கற்பிட்டி இணைந்த சுற்றுலா விடுதி***

டச்பே தீவாக கருதப்படும் கற்பிட்டி இணைந்த சுற்றுலா செயற்றிட்டமாக சுற்றுலா, விவசாயம், கடற்தொழில் மற்றும் சகல கைத்தொழில்களையும் கொண்ட 4133 ஏக்கர் செயற்றிட்டத்தில் அமைந்துள்ள செயற்றிட்டமாகும். அவ் விடுதி செயற்றிட்டங்களின் டச்பே, போர்த்துக்கல்பே மற்றும் மிகுந்த கவர்ச்சி மிக்க தீவாக காரைதீவு, இரணைதீவு, பெரிய கரச்சை, எருமைத்தீவு, சின்னக் கரச்சை, ஓடைக்கரைத் தீவு, பதலங்குண்டுவ, பள்ளியவத்த, வேலாலி ஆகியன காணப்படுகின்றன. இவ் கற்பிட்டி விடுதி வளாகத்தில் வில்பத்து சரணாலயம், முந்தல, புத்தளம் ஏரி, கற்பிட்டித்தீவு சார்ந்த பிரதேசங்கள் அமைந்துள்ள வலயம் தொடக்கம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் வரையாக மிகக் குறுகிய தூரமே காணப்படுகின்றது. கூடுதலான சுற்றுலாப் பிரயாணிகளின் கவர்ச்சி மிக்க அதாவது கரையோரம், கடற்பாறைகள், திமிங்கிலம் மற்றும் டொல்பின் மீன் வகை, பறவைகள் சரணாலயம் போன்ற வளங்கள் கடற்தொழில் சமூகம் ஆகிய சகல முறைகளிலான கவர்ச்சிகள் இவ் கற்பிட்டி சுற்றுலா வலயத்தில் அமைந்துள்ளன.









2013 டிசம்பர் இறுதி வரை கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(a) செயற்றிட்ட காலம் 2012 நவம்பர் 6ம் திகதி நிறைவடைந்தது.
(b) அமைச்சின் அலோசனைகளுக்கமைய செயற்றிட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையின் வெற்றிடங்களுக்கமைய சேர்த்து கொள்ளல்.
(c) செயற்றிட்டத்தின் கட்டிடக் கலைஞர் திரு. பிரதிப் பர்னாந்து மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி. மேனகா விஜயகோன் 2012 ஒக்டேபர் மற்றும் 2012 டிசம்பர் 31ம் திகதி விலகினர்.
(d) இரணை தீவிற்குரிய நீதிமன்றத்திற்குரிய இரு சட்டப்பணிகள் ஆண்டு பூராகவும் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இதில் ஒரு சட்ட ரீதியிலான செயற்பாடு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்குப் பயன் கொண்ட முறைக்கு தீர்க்கப்பட்டுள்ளது.
(e) இரணைதீவுக்குரிய முதலீட்டாளர்களினால் தமது முதலீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கைகள்.
    (a) சகல மீனவ சமூகத்தையும் தீவின் ஒரு பக்கத்தில் குடியமர்த்தல்
    (b) வேறு தீவு ஒன்றில் குடியமர்த்தல்.

(f) வேலாலி தீவின் நீர் பங்களாவினை நிர்மானிக்க சன்ரிசோர் தனியார் கம்பனி மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வாய்ப்பழித்தல்.
(g) 2012 நவம்பர் 03ம் திகதி சபாரிபே ரிசோட் கம்பனிக்கு உச்சமுனி தீவின் வட பிரதேசத்தின் 45 ஏக்கர் நிலப்பரப்பினை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறல்.
(h) சமயத் தலைவர்கள் மற்றும் மீன்பிடி சமூகத்திற்கு அவர்களை தனியாக குடியமர்த்துவதற்காக பலசுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடாத்தல்.
(i) இறுதியில் முதலீட்டாளர்கள் மீனவ சமூகம் குடியமராத பிரதேசங்களில் ஹோட்டல்களை நிர்மானிக்கத் தீர்மானித்தனர்.

*(2) குச்சவெளி*

சுற்றுலா செயற்றிட்டத்தின் உயர்ந்த சூழலில் அமைந்துள்ள விடுதி செயற்றிட்டமாகும். இதற்கமைய வடக்கு, கிழக்கு வலயங்களில் இரக்கண்டிப் பாலம் மற்றும் சலபாயாரு பாலம் வேறுபடும் வடக்கு, கிழக்கு வலயங்களில் இச்செயற்றிட்டம் அமைந்துள்ளது. முழுமையான விடுதிச் செயற்றிட்டம் 206.45 ஹெக்டெயர் என்பதுடன் (510 ஏக்கர்) இவ் அமைவிடத்தில் 9 காணித் துண்டுகள் அமைந்துள்ளன. இதற்கமைய குச்சவெளி சுற்றுலா வலயம் ஆகிய இலக்கம் 1671/29 , 2010 செப்ரெம்பர் 17ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடுதி திருகோணமலைக்கு 18 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சுற்றுலா கவர்ச்சி மிக்க இடமாகும். இவ்விடுதியை சார்ந்த பிரதேசங்களில் சுற்றுலா கவர்ச்சி மிக்க செயற்றிட்டமாக தொல்பொருளியல் பிரதேசம் புல்மேட்டை, காரிய செயற்றிட்டம், கோணேஸ்வரர் இந்து கோயில் , கிண்ணியா சுடுநீர்க் கிணறு, நீண்ட வீதி மற்றும் பாலம், இயற்கைத் துறைமுகம், மாபிள் கரையோரம் போன்றன இப்பிரதேசத்தை அண்மித்தாக அடங்குகின்றன. பிரதானமாக கடற்பாறைகள், திமிங்கிலம் மற்றும் டொல்பின் போன்ற கவர்ச்சி மிக்க காட்சிகளைத் தொடர்ந்தும் காண்பதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. பிரதான விமான நிலையத்திலிருந்து 45 நிமிடங்களுக்குள் மத்திய நிலையத்தை சென்றடைய முடியும்.





2013 டிசம்பர் இறுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் செயற்றிட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

(a) இரு முதலீட்டாளர்களினால் 30 ஏக்கர் ஹோட்டல் செயற்றிட்டத்திற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறாயின்

(1) ஜங்கிள் பீச் விடுதி தனியார் கம்பனி – 10 ஏக்கர்
(2) அம்பா ஹோட்டல் மற்றும் விடுதி தனியார் கம்பனி – 10 ஏக்கர்

- ஜங்கிள் பீச் ரிசோட் கம்பனியினால் 40 அறைகளை கொண்ட ஹோட்டலைத் தாபித்து செயற்பாடுகள் 2012 ஜூன் 22ம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




- அம்பா ஹோட்டல் விடுதி கம்பனியின் அடிப்படைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிர்மானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

b. அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய தற்போது உள்ள முதலீட்டாளர்களுக்காக மீள் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்பினை வழங்குல்.






(b) ஜங்கிள் பீச் ஹோட்டல் கம்பனிக்கு 10 ஏக்கர் மேலதிகமாக கையளிக்கப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய உரிய காலத்திற்குள் செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

### *(3) யால வனப்பூங்காவின் விடுதி அபிவிருத்தி*

யால வனப்பூங்காவில் அமைந்துள்ள கிளையாக பலட்டுபாணவை கருத முடியும். இதனை சூழ குமண, புந்தல, வீரவில மற்றும் லுணுகம்வெஹற ஆகிய சரணாலயங்கள் அமைந்துள்ளன. இருப்பினும் யால பலட்டுபாண வன சரணாயலம் மிகுந்த அமைதியான சூழலில் உள்ள பிரதேசமாக கருத முடியும். யால இலங்கையின் இரண்டாவது வன சரணாயலமாகக் கருத முடிவதுடன் இந்த வனப்பூங்கா 1900 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவடைந்துள்ளது. இதன் எல்லை இந்து சமுத்திரம் என்பதுடன் நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கு வலயங்களின் எல்லையில் அமைந்துள்ளன. யால வன சரணாலயத்திற்கு கொழும்பிலிருந்து 300 கிலோ மீற்றர் தூரமாகும். (190 மைல்) தென் மாகாணத்தில் ஆரம்பமாகி கிழக்கு மாகாணம் வரை விரிவடைந்துள்ள 979 கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கொண்ட (378 சதுர கிலோ மீற்றர்) பலட்டுபாண வலயத்தில் 1107 ஏக்கர் உத்தேச ஹோட்டல் செயற்றிட்ட அபிவிருத்தி வலயமாக பெயரிடப்பட்டுள்ளது. இவ்வலயத்தில் ஆரம்ப காலங்களில் குடியேற்றங்கள் காணப்பட்டதுடன் உள்நாட்டு / வெளிநாட்டுச் சுற்றுலா பிரயாணிகளின் கவர்ச்சியினை வென்றுள்ள பிரதேசமாக கதிர்காமம் மற்றும் சிதுள்பவ்வ ஆகிய இடங்களுக்கு அருகாமையில் இது அமைந்துள்ளது. 2013 டிசம்பர் இறுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- 7 முதலீட்டாளர்களை தேர்ந்தெடுத்த உத்தேச அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக 7 ஏக்கரை ஒதுக்குதல்.
- பிரதான திட்டமிடலின் அளவியல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.






### *(4) தேதுவ விடுதி அபிவிருத்தி*

தேதுவ வலயம் தென்தொட்டுவைக்கு கிழக்கில் அமைந்துள்ள சதுப்பு நிலம், வயற் காணி, நீர் ஊற்று சார்ந்த பிரதேசமாகும். இதற்கமைய இவ் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களைக் கொண்டதாக இனங்காணப்பட்டுள்ள காணியின் அளவு 1700 ஏக்கராகும். இவ் தேதுவ சார்ந்த பிரதேசத்தில் நீர் சார்ந்த செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2013 டிசம்பர் இறுதியளவில் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகள் இச்செயற்றிட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- 2012ம் ஆண்டில் காணிக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டது.
- நட்ட ஈட்டுக் கொடுப்பனவிற்காக சுமார் 40 மில்லியன் ரூபா செலவிடல்.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மீள காணி சுவிகரிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.










### *(5) அறுகம்பை சுற்றுலா அபிவிருத்தி*

அறுகம்பை சுற்றுலா வலயம் அம்பாரை மாவட்டத்தில் பொத்துவிலுக்கு அருகாமையில் தென் கிழக்கு வலயத்தில் அமைந்துள்ளது. உலகின் ரம்மியமான கரையோரத்தை சூழ சமுத்திர வலயமாக அறுகம்பையை கருத முடியும். இத்தீவிற்கு 70 கிலோ மீற்றர் அப்பால் உள்ள பிரதேசம் வனம் சார்ந்த பிரதேசம் என்பதுடன் கரையோர வலயம் மிக அன்மித்த பிரதேசமாக காணப்பட்ட போதிலும் லாகுகல தேசிய விடுமுறை விடுதி இத்தீவிற்கு 10 மைலுக்கு அப்பால் அமைந்துள்ளது. மேலும் யால வன சரணாயத்திற்கு 20 மைல் தொலைவில் இப்பிரதேசம் அமைந்துள்ளது.

கொழும்பிலிருந்து 314 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள அறுகம்பையில் சுற்றுலா வலயம் அமைந்துள்ளதுடன், அறுகம்பை உலகின் சேபிங் விளையாட்டுக்குப் பொருத்தமான பிரதேசமாக அறிமுகப்படுத்த முடியும். பிரதேசம் சார்ந்த பொத்துவில் வலயம் கடற்தொழில் கிராமம் கொண்ட பிரதேசம் என்பதுடன் கொழும்பிலிருந்து இலகுவில் அப்பிரதேசத்தை சென்றடைய முடியும். இப்பிரதேசம் சேபிங் விளையாட்டுக்கு முக்கியமான பிரதேசமாக கொள்ள முடியும். சேபிங் விளையாட்டுக்காக ஒரு ஏக்கர் பிரதேசம் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

2013 டிசம்பர் இறுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(i) இனங்காணப்பட்ட ஒரு சில காணி வன வள திணைக்களத்திற்கு விடுவித்தல்.
(ii) சட்ட விரேதமாக பொறுப்பேற்கப்பட்ட காணிக்கான சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
(iii) அறுகம்பை சுற்றுலா வலயத்தில் அமைந்துள்ள தற்போது நிறுவனம் மற்றும் அவற்றின் நிலைமைகளை இனங்கண்டு அவ் வலயத்தின் அளவீடு செய்தல்.
(iv) பாணம வலயத்தில் அமைந்துள்ள அரச காணி சுற்றுலா அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக காணி உத்தியோகத்தர், பிரதேச செயலாளரினால் இனங்காணல்.





## One Stop பிரிவு

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் One Stop பிரிவினால் புதிய முதலிட்டுச் செயற்றிட்டத்திற்கான வசதிகள் வழங்கப்படுவதுடன், அம் முதலீட்டாளர்களுக்கு தேவையான ஒழுங்கு விதிகளை இலகுபடுத்தல் மற்றும் பணிகளுக்கு துரித கதியில் கையளிப்பதற்கு மற்றும் அங்கீகாரச் செயற்பாடுகளை முறைப்படுத்த மற்றும் அரச நிறவனத்தின் இணைப்பினை உருவாக்க வசதிகள் வழங்கப்படுகின்றன.

2011 – 2016 சுற்றுலா அபிவிருத்தி வியூகம் 2016ம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலா பிரயாணிகளை இலங்கைக்கு வரவழைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய இலங்கை பொருளாதாரத்தில் 45000 ஹோட்டல் அறைகள் அவசியப்படுகின்றன. One Stop பிரிவு மிக திருப்தி கரமான பங்கேற்புடன் குறித்த இலக்கை எட்டுவதற்காக தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைய புதிய அறைகளை ஆரம்பிக்க தேசிய அறைக் கொள்ளளவினை விருத்தி செய்வதற்காக செயற்றிட்ட முதலீடுகளுக்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யும் போது One Stop பிரிவு எதிர்வரும் ஆண்டுகளுக்குள் ஹோட்டல் அறைகளை அதிகரிப்பதற்காக அதிஉயரிய பங்களிப்புகளை வழங்குகின்றது. இதற்கமைய தற்போது பூர்த்தி அடைந்து வரும் ஹோட்டல் முதலீட்டு அறை 2014ம் ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 2800 என்பதுடன், 2015ம் ஆண்டு இறுதியில் இதனுடன் 1600 அறைகளை இணைகின்றன. இதற்கமைய One Stop பிரிவின் பங்களிப்பிற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட முறைமைக்கு தேசிய அறைகளின் எண்ணிக்கையை விரிவு படுத்துவதற்கான வரைபடம் காண்பிக்கப்பட்டுள்ளது.




One Stop பிரிவினால் மேற்கொள்ளப்படும் முதலீட்டுச் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 ம் ஆண்டு கிடைக்கப் பெற்ற செயற்றிட்டங்களின் எண்ணிக்கை - 298
2013 ம் ஆண்டுக்குள் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை - 59
2013 ம் ஆண்டு இறுதியில் அங்கீகாரங்கள் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை - 36

செயற்றிட்ட வகைப்படுத்தல் / முதலீட்டாளர்களின் அளவையியல் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பரம்பல் அமெரிக்க டொடர் மில்லியன் | மொத்த செயற்றிட்டம் 2013 வரை | செயற்றிட்டம் 2012 | செயற்றிட்டம் 2012 | வித்தியாசம் % |
|---|---|---|---|---|
| குறை 0.5 | 53 | 3 | 12 | 300.00 |
| 0.50 - 1 | 28 | 1 | 5 | 400.00 |
| 1.10 - 2 | 39 | 8 | 9 | 12.50 |
| 2.10 - 5 | 84 | 13 | 18 | 38.46 |
| 5.10 - 10 | 41 | 5 | 3 | -40.00 |
| 10.10 - 20 | 27 | 2 | 7 | 250.00 |
| அதிகரிப்பு 20.1 | 26 | 1 | 5 | 400.00 |
| **மொத்தம்** | 298 | 33 | **59** | 78.79 |




**முதலீட்டுச் செயற்றிட்டம் - 2011 - 2013**

2013ம் ஆண்டில் முதலீட்டு செயற்றிட்டங்களின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் முதலீட்டுச் செயற்றிட்டங்களின் கிடைப்பனவின் அளவு தற்போது அதிகரித்துள்ளமையினால் 370 செயற்றிட்டங்களில் சுற்றுலா கொள்ளளவு 2014ம் ஆண்டில் 25000 வரை அதிகரிக்கும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.



2013ம் ஆண்டு இறுதியில் One Stop பிரிவினால் புதிதாக 26 செயற்றிட்டங்களின் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் பெறுமதி 20 மில்லியன் அமெரிக்க டொலர் 20(US d 20 மில்லியன்) இச் செயற்றிட்டம் 26 இல் 05, 2013ம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது.

இவ் 05 செயற்றிட்டங்கள் கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய இச் செயற்றிட்டங்கள் மூலம் அறைக் கொள்ளளவு 2083 இனால் தேசிய அறைக் கொள்ளளவுடன் இணையும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைய முதலீட்டு ஒப்பந்தத்திற்காக 925.25 மில்லியன் அமெரிக்க டொலர் இச்செயற்றிட்டத்தில் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொண்ட செயற்றிட்டம் 2011 - 2013**

இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொண்ட 148 செயற்றிட்டங்களில் 36 செயற்றிட்டங்களுக்காக புதிய முதலீட்டுச் செயற்றிட்டங்கள் 2013ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

இதற்கமைய இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொண்ட முதலீட்டுச் செயற்றிட்டங்களின் கோளமய அமைவிடம் கிழே குறிப்பிடப்பட்டுள்ளது

**One Stop பிரிவில் இறுதி அங்கீகாரம் பெற்றுக் கொண்ட முதலீட்டுச் செயற்றிட்டங்கள் மாவட்டங்களுக்கமைய**

| | 2011 இறுதி அங்கீகாரம் | | | 2012 ஆண்டுக்குள் இறுதி அங்கீகாரம் | | | 2013 இறுதி அங்கீகாரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | மொத்த செயற்றிட்டம் | அறை | முதலீடு அமெரிக்க டொலர் மில்லியன் | செயற்றிட்டம் | அறை | முதலீடு அமெரிக்க டொலர் மில்லியன் | செயற்றிட்டம் | அறை | முதலீடு அமெரிக்க டொலர் மில்லியன் |
| அம்பாரை | | | | | | | 1 | 31 | 1.8 |
| அநுராதபுரம் | 1 | 28 | 0.43 | | | | | | |
| பதுளை | | | | 1 | 12 | 0.69 | | | |
| மட்டக்களப்பு | 7 | 285 | 16.46 | 7 | 132 | 13.78 | | | |
| கொழும்பு | 9 | 1067 | 118.59 | 8 | 874 | 108.31 | 4 | 329 | 24.14 |
| காலி | 7 | 198 | 22.88 | 12 | 722 | 86.2 | 4 | 80 | 10.86 |
| கம்பஹா | 3 | 293 | 30.81 | 5 | 290 | 38.08 | 3 | 48 | 10.23 |
| ஹம்பாந்தோட்டை | 3 | 164 | 13.06 | 4 | 168 | 11.19 | 5 | 845 | 171.76 |
| யாழ்ப்பாணம் | 3 | 92 | 6.4 | 1 | 18 | 0.58 | 1 | 66 | 6.36 |
| களுத்துறை | 5 | 335 | 33.49 | 7 | 322 | 16.44 | 5 | 712 | 110.89 |
| கண்டி | 1 | 18 | 0.63 | 2 | 154 | 21 | | | |
| கேகாலை | | | | | | | | | |
| கிளிநொச்சி | | | | | | | | | |
| குருநாகல் | | | | | | | 1 | 16 | 0.37 |
| மன்னார் | | | | | | | 1 | 52 | 1.22 |
| மாத்தளை | 2 | 29 | 0.87 | 3 | 118 | 16.55 | 3 | 193 | 17.2 |
| மாத்தறை | 3 | 54 | 21.9 | 4 | 169 | 21.7 | 3 | 75 | 13.63 |
| மொனராகலை | | | | | | | 2 | 42 | 1.37 |
| முல்லைத்தீவு | | | | | | | | | |
| நுவரெலியா | | | | 1 | 42 | 3.7 | | | |
| பொலன்நறுவை | | | | | | | 1 | 33 | 0.63 |
| புத்தளம் | 3 | 104 | 8.4 | 3 | 221 | 12.9 | | | |
| இரத்தினபுரி | | | | | | | | | |
| திருகோணமலை | 3 | 116 | 20.76 | 4 | 122 | 10.25 | 1 | 10 | 0.6 |
| வவுனியா | | | | | | | 1 | 15 | 1.16 |
| | **50** | **2783** | **294.68** | **62** | **3364** | **361.37** | **36** | **2547** | **372.22** |




**2013ம் ஆண்டுக்காக நிர்மாணிக்கப்படும் செயற்றிட்டங்கள் - 2013**

2013 டிசம்பர் 31ம் திகதியன்று மாவட்டங்களுக்கமைய ஹோட்டல் பாடசாலைகளின் செயற்றிட்டம் வழங்கப்பட்டுள்ள முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | நிர்மானிக்கப்படும் செயற்றிட்டம் 2013 | | | செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 2013ம் ஆண்டில் நிர்மானப்பணிகள் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 | | | 2015 | | | 2016 | | |
| மாவட்டம் | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை | முதலீடு | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை | முதலீடு | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை | முதலீடு | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை | முதலீடு |
| அம்பாரை | 1 | 31 | 1.8 | | 31 | 1.8 | | | | | | |
| மட்டக்களப்பு | 8 | 175 | 11.32 | 6 | 131 | 7.69 | 2 | 44 | 3.63 | | | |
| கொழும்பு | 13 | 1799 | 206.28 | 8 | 960 | 106.9 | 3 | 470 | 43.88 | 2 | 369 | 55.5 |
| காலி | 8 | 393 | 40.36 | 5 | 332 | 34.84 | 2 | 19 | 2.2 | 1 | 42 | 3.32 |
| கம்பஹா | 5 | 236 | 35.46 | 4 | 226 | 34.91 | 1 | 10 | 0.55 | | | |
| ஹம்பாந்தோட்டை | 3 | 722 | 162.9 | 1 | 78 | 5.9 | 2 | 644 | 157 | | | |
| யாழ்ப்பாணம் | 3 | 80 | 3.98 | 2 | 38 | 0.98 | 1 | 42 | 3 | | | |
| களுத்துறை | 9 | 437 | 26.62 | 6 | 361 | 25.91 | 3 | 76 | 0.71 | | | |
| கண்டி | 1 | 120 | 11 | | | | 1 | 120 | 11 | | | |
| மன்னார் | 1 | 52 | 1.22 | | | | 1 | 52 | 1.22 | | | |
| மாத்தளை | 4 | 132 | 16.42 | 4 | 132 | 16.42 | | | | | | |
| மாத்தறை | 5 | 274 | 38.55 | 5 | 274 | 38.55 | | | | | | |
| நுவரெலியா | 1 | 42 | 3.7 | 1 | 42 | 3.7 | | | | | | |
| புத்தளம் | 2 | 76 | 6.1 | 2 | 76 | 6.1 | | | | | | |
| திருகோணமலை | 4 | 104 | 18.66 | 3 | 94 | 18.06 | 1 | 10 | 0.6 | | | |
| **மொத்தம்** | **68** | **4673** | **584.37** | **48** | **2775** | **301.76** | **17** | **1487** | **223.79** | **3** | **411** | **58.82** |




| | Ampara | Batticaloa | Colombo | Galle | Gampaha | Hambantota | Jaffna | Kalutara | Kandy | Mannar | Matale | Matara | Nuwara Eliya | Puttalam | Trincomalee |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ROOMS 2016 | | | 369 | 42 | | | | | | | | | | | |
| ROOMS 2015 | | 44 | 470 | 19 | 10 | 644 | 42 | 76 | 120 | 52 | | | | | 10 |
| ROOMS 2014 | 31 | 131 | 960 | 332 | 226 | 78 | 38 | 361 | | | 132 | 274 | 42 | 76 | 94 |

## ஹோட்டல் செயற்றிட்டங்களின் செயற்பாட்டு ஆரம்பம்

ஹோட்டல் செயற்றிட்டங்களுக்கான செயற்பாடுகள் 2013ம் ஆண்டில் அனேகமான பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. இதற்கமைய இவ் ஆண்டில் 1161 அறைகள் சுற்றுலா பொருளாதாரத்துடன் இணையவுள்ளது. இதற்கமைய அறை நிர்மானிப்பு கொள்ளளவு அதிகரிப்பு 2012ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 23.77% மாகும். 2014ம் ஆண்டில் 2775 அறைகளின் கொள்ளளவு அதிகரிப்பு 37.5% மாகும். இதற்கமைய செயற்றிட்டத்தில் காணப்படும் தகவல்கள் தற்போதைய முன்னேற்றத்துடன் அறைக் கொள்ளளவு 2015ம் ஆண்டின் 3500 ஆகும்.




## பொதுநலவாய அரச தலைவர்களின் உச்சி மாநாடு - 2013

## முதலீட்டு தகவல் இல்லம்

பொதுநலவாய சபை அரச தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு இணைவாக பொதுநலவாய சபையின் வர்த்தக மாநாடு 2013 நவம்பர் 11ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை கொழும்பில் இடம் பெற்றது பொதுநலவாய சபை மாநாட்டுக்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டுத் தகவல் இல்லத்தில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது என்ற தொனிப்பொருளின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைகளுக்கமைய மாநாடு இடம்பெற்றது. இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தும் பிரதான நோக்கமான அமைவது முதலீடு தொடர்பான சகல தகவல்களையும் சர்வதேச, உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு ஒரே இடத்தில் வழங்குவதாகும். இவ்வேலைத்திட்டம் 2013 15மம் திகதி வரை முதலீட்டாளர்களுக்கு ஒரே இடத்தில் வழங்கப்பட்டது. இவ்வேலைத்திட்டம் 2013 நவம்பர் 11ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை அரச முகவர் நிறுவனத்தின் 35 பேரின் கூட்டிணைப்புடன் முன்னெடுக்கப்பட்டது. இக்கால எல்லைக்குள் பொதுநலவாய சபை நாடுகளின் முதலீட்டாளர்களுக்கு உரிய தகவல்கள் மற்றும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வசதிகள் உட்பட சந்தர்ப்பங்கள் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இதற்கமைய இத்தகவல் இல்லத்தின் மூலம் 35 முதலீட்டாளர்கள் 6000 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுச் செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்களை கேட்டறிந்தனர்.

## www.sltipp.com

இம் முதலீட்டுத் தகவல் இல்லத்திற்கு இணைவாக One Stop பிரிவினால் இணையத்தளமும் அமுல்படுத்தப்பட்டது. இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் www.sltipp.com என்ற பெயரில் இணையத்தளத்தை உருவாக்கி தேவையான தகவல் வசதிகள் முதலீட்டாளர்களுக்கு விரிவு படுத்தப்பட்டன. இதன்போது முதலீட்டாளர்களுக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்கமைய அரச மற்றும் தனியார் காணிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவற்றிற்கு தேவையான வதிகளை வழங்கல். (செயற்றிட்டம் தொடர்பான தீர்மானத்தை எடுக்கத தேவையான சேவைகளை வழங்கல்) நிதி மற்றும் ஊக்குவிப்பு, முதலீடு, அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள், கூட்டிணைந்த வர்த்தகம், ஹோட்டல் முகாமைத்துவம், ஏனைய முதலீட்டுச் சந்தர்ப்பங்கள், ஆரம்ப அபிவிருத்தி யோசனை மற்றும் ஏனைய முதலீட்டு அறிவித்தல்கள் உட்பட வசதிகளும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.










## உள்நாட்டுச் சுற்றுலா மற்றும் விடுதி நிருவாகம்

### 1. சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் நிறைவு - 2013

**i. பாசிக்குடா வீதி அபிவிருத்தி**





| | |
|---|---|
| ஒப்பந்ததாரர்கள் | தாரகி மற்றும் ரன்மல் அபிவிருத்தியாளர்கள் |
| ஆலோசகர் | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை |
| செயற்றிட்ட செலவினம் | 67 மில்லியன் ரூபா |
| அமைவிடம் | வடக்கு / தெற்கு எல்லை |
| வேலைத்திட்ட ஆரம்பம் | 2010 ஆகஸ்ட் 21 |
| மேலதிகம் | பூரணப்படுத்தப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| செயற்றிட்டத்தின் பெயர் / வேலைத்திட்டம் | பாசிக்குடா விடுதி |
| விபரங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் | தெருவிளக்கு பொது மக்கள் பயன்படுத்தும் பிரதேசங்கள் |
| மொத்த முதலீடு | 0.376 மில்லியன் |
| தற்போதைய நிலைமைகள் - அபிவிருத்தி | 100% |

**2. தற்போது அமுலில் உள்ள சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம்**

| i. காணியை மீட்கும் செயற்றிட்டம் பொதுப் பிரதேசம் - தேசிய விடுமுறை விடுதி பாசிக்குடா | |
|---|---|
|  | |
| ஒப்பந்ததாரர்கள் | தேர்ந்தெடுக்கப்பட்ட 05 ஒப்பந்ததாரர்கள் |
| ஆலோசகர் | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை |
| செயற்றிட்ட செலவினம் | 52 மில்லியன் ரூபா |
| அமைவிடம் | பொது மக்கள் நடமாடும் பிரதேசம் |
| பணி ஆரம்பம் | 2012.10.08 |
| மேலதிகம் | 75% அளவை பூர்த்தி செய்தல் |

| ii. தென் பிரதேச வீதியினை காப்பட் இடல் # தேசிய விடுமுறை விடுதி பாசிக்குடா | |
|---|---|
|  |  |
| ஒப்பந்ததாரர்கள் | மஹநெகும நிர்மாணக் கம்பனி |
| ஆலோசகர் | டீ. சீ. எல் |
| செயற்றிட்ட செலவினம் | 141.5 மில்லியன் ரூபா (இறுதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது) |
| அமைவிடம் | தென் பிரதேசம் |
| பணி ஆரம்பம் | 2013.09.02 |
| மேலதிகம் | 65% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

### iii. உள்ளக வீதி அபிவிருத்தி – வாகனத் தளம் பென்தொட்ட தேசிய விடுமுறை விடுதி





| | |
|---|---|
| ஒப்பந்ததாரர்கள் | பிரதேச வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| ஆலோசகர் | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை |
| செயற்றிட்ட செலவினம் | 20 மில்லியன் ரூபா |
| தற்போதைய நிலைமை – முன்னேற்றம் | 90% |

### iv. சுற்றுலா மற்றும் கலாச்சார மத்திய நிலையம் - கரிடோ கரையோரம் - களுத்துறை






| | |
|---|---|
| ஒப்பந்ததாரர்கள் | தீர்மானிக்க வேண்டும் |
| ஆலோசகர் | முதித்த ஜெயக்கொடி தனியார் கம்பனி |
| விபரங்கள் - அபிவிருத்தி செயற்பாடுகள் | வர்த்தகக் கட்டிடத் தொகுதி, வெளிச் செயற்பாடுகள், திறந்த எல்லை, வெளிப்பணிகள் |
| மொத்த முதலீடு | தீர்மானிக்க வேண்டிய விடயங்கள் |
| தற்போதைய நிலைமை / முன்னேற்றம் | திட்டமிடல் கட்டம் |

**தரம் மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவு**

**சுற்றுலா நிறுவனங்களுக்காக பதிவு மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் பெறல்**

இலங்கை சுற்றுலா அதிவிருத்தி அதிகார சபையின் தரம் மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவின் பிரதான பணிகளாக சுற்றுலா வர்த்தகத்திற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் பதிவினை அறிமுகப்படுத்தவதனைக் குறிப்பிட முடியும். இப்பணிகளுக்காக தொடர்ந்தும் உரிய பிரிவின் உத்தியோகத்தர்கள் சுற்றுலாத் துறையின் வர்த்தகத்தை பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர். இதற்கமைய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலாத் துறையின் வர்த்தகத்திற்கு தேவையான மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டுக்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் வழிகாட்டல்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| **வகைப்படுத்தல்** | **நிறுவனங்களின் எண்ணிக்கை** | **அறைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| வகைப்படுத்தப்படாத ஹோட்டல்கள் | 23 | 1119 |
| புடிக் ஹோட்டல் | 02 | 23 |
| புடிக் விலாஷ் | 04 | 24 |
| சுற்றுலா உபசரணை இல்லம் | 49 | 488 |
| சுற்றுலா உணவகம் | 21 | - |
| சுற்றுலா முகவர் நிறுவகம் | 63 | - |
| பலசரக்குப் பூங்கா | 04 | - |
| சுற்றுலா கட்டிடத் தெகுதி | 04 | - |
| ஸ்பாஸ் | 04 | - |

| **வகைப்படுத்தல்** | **எண்ணிக்கை** |
|---|---|
| தேசிய சுற்றுலா வழிகாட்டுனர் | 141 |
| வாகன சுற்றுலா வழிகாட்டுனர் | 24 |
| வலய சுற்றுலா வழிகாட்டுனர் | 17 |

2013ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களின் எண்ணிக்கை

| **வகைப்படுத்தல் மற்றும் ஹோட்டல்** | **நிறுவனங்களின் எண்ணிக்கை** | **அறைகள்** |
|---|---|---|
| ஐந்து நட்சத்திர ஹோட்டல் | 15 | 3,343 |
| நான்கு நட்சத்திர ஹோட்டல் | 18 | 2,072 |
| மூன்று நட்சத்திர ஹோட்டல் | 13 | 860 |
| இரண்டு நட்சத்திர ஹோட்டல் | 33 | 1,724 |
| ஒரு நட்சத்திர ஹோட்டல் | 35 | 1,390 |
| **வகைப்படுத்தப்பட்ட ஹோட்டல்** | **114** | **9,389** |
| வகைப்படுத்தப்படாத ஹோட்டல் | 167 | 6,719 |
| **மொத்த ஹோட்டல் எண்ணிக்கை** | **281** | **16,108** |

2013ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியன்று சுற்றுலாத் துறையின் வர்த்தகர்களின் எண்ணிக்கை

| வகைப்படுத்தல் | நிறுவனங்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| புடிக் ஹோட்டல் | 25 | 441 |
| புடிக் விலாஷ் | 31 | 204 |
| சுற்றுலா உபசரணை இல்லம் | 676 | 7,230 |
| சுற்றுலா உணவகம் | 394 | |
| சுற்றுலா முகவர் நிறுவனம் | 593 | |
| பலசரக்குப் பூங்கா | 30 | |
| சுற்றுலா கட்டிடத் தொகுதி | 58 | |
| ஸ்பாஸ் | 17 | |
| நீர்ச் செயற்பாடுகள் | 07 | |
| தேசிய சுற்றுலா வழிகாட்டல் | 1516 | |
| வாகன சுற்றுலா வழிகாட்டுனர்கள் | 1,357 | |
| வலய சுற்றுலா வழிகாட்டுனர்கள் | 1197 | |
| செயற்றிட்ட சுற்றுலா வழிகாட்டுனர்கள் | 150 | |

**உபசரணை இல்ல வேலைத்திட்டம் 2013**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் உபசரணை இல்ல வேலைத்திட்டம் 2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது மீண்டும் 2013ம் ஆண்டு மீள் கட்டமைக்கப்பட்டு வர்த்தக மயப்படுத்தப்பட்டது. இதற்கமைய இவ் உபசரணை இல்ல வேலைத்திட்டத்தின் ஊடாக மேற் கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் 2016ம் ஆண்டு 1000 உபசரணை இல்லங்கள் தாபித்தல் இதன் பிரதான நோக்கமாகும்.

உபசரணை இல்ல புதிய இலச்சனை

இவ்வேலைத்திட்டத்தை தேசிய மட்டத்தில் அமுல்படுத்தும் திவிநெகும வேலைத்திட்டத்திற்கு இணைவான பணிகளாக அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய இதன் பிரதான நோக்கமாக அமைவது சுற்றுலா பொருளாதாரத்தின் பிரதி இலாபங்களையும் கிராமிய சமூகத்திற்கு பெற்றுத்தருவதாகும்.

2013 டிசம்பர் 31ம் திகதியன்று சுற்றுலா இல்ல வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **துணை வகைப்படுத்தல்** | **வகைப்படுத்தல்** | **அலகுகளின் எண்ணிக்கை** | **அறைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **பங்களாக்கள்** | அங்கீகரிக்கப்பட்ட | 33 | |
| | அதிசிறந்த | 37 | |
| | பகுதி அளவில் சிறந்த | 56 | |
| | **மொத்தம்** | **126** | **530** |
| **தொல் பொருள் பங்களாக்கள்** | பகுதி சிறந்த | 2 | |
| | **மொத்தம்** | **2** | **10** |
| **உபசரணை இல்லம்** | அங்கீகரிக்கப்பட்ட | 71 | |
| | அதிசிறந்த | 75 | |
| | பகுதி அளவில் சிறந்த | 27 | |
| | **மொத்தம்** | **173** | **532** |
| **வாடகை இல்லம்** | அங்கீகரிக்கப்பட்ட | 6 | |
| | அதிசிறந்த | 11 | |
| | பகுதி அளவில் சிறந்த | 3 | |
| | **மொத்தம்** | **20** | **48** |
| **வாடகை இல்லம்** | அங்கீகரிக்கப்பட்ட | 1 | |
| | சிறந்த | 1 | |
| | **மொத்தம்** | **2** | **8** |
| **மொத்தம்** | | **323** | **1128** |

உபசரணை இல்ல வேலைத்திட்டத்தின் நோக்கம் மற்றும் இலக்கினை நிறைவேற்றுவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மிகுந்த பலம் மிக்க உபசரணை இல்ல வலையமைப்பின் 2013ம் ஆண்டில் உருவாக்குவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

01. உபசரணை இல்லங்களை தயாரிக்கும் போது தொழில்நுட்ப உதவி சுற்றுலா தேவைகளுக்காக வழங்கப்படுகின்றன.
02. நிதி உதவி
03. பயிற்சி
04. விற்பனை

**2013ம் ஆண்டில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள்**

- **தேசத்திற்கு மகுடம் - அம்பாரை**
  **2013 மார்ச் 23 தொடக்கம் 28 வரை**

| 2013.01.01 ஆம் திகதி அன்று இலங்கை சு. அ. அ. ச நிதி நிலுவை | 186,600,340.18 |
| 2013.01.01 ஆம் திகதி அன்று கற்பிட்டி செயற்திட்ட நிதி நிலுவை | 55,572.05 |
| **2013.01.01 ஆம் திகதி அன்று நிதிநிலவை** | 186,655,912.23 |

# விடுதி செயற்பாட்டுச் சுருக்கம்
## 2013 டிசம்பர் 31ம் திகதியன்று முடிவடைந்த கால எல்லைக்காக

| | குறிப்பு | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| **உள்நாட்டுச் சுற்றுலா மற்றும் விடுதி** | | | |
| கதிர்காமம் | | 3,314,513.65 | 4,892,670.72 |
| நுவரெலியா | | (1,463,681.70) | 2,508,773.01 |
| பண்டாரவெல | | (269,100.94) | 1,214,233.91 |
| அநுராதபுரம் | | 1,069,608.68 | 373,010.83 |
| **உப மொத்தம்** | | **2,651,339.69** | **8,988,688.47** |
| **தேசிய விடுமுறை விடுதி** | | | |
| பென்தொட்ட | | 13,302,835.58 | 13,230,796.55 |
| பொலன்நறுவை / கிரித்தலை | | 2,622,219.76 | 2,873,596.26 |
| கல்குடா | | (13,934,265.82) | (12,012,571.07) |
| **உப மொத்தம்** | | **1,990,789.52** | **4,091,821.74** |
| **மிகை / (குறைவு)** | | **4,642,129.21** | **13,080,510.21** |

**விடுமுறை விடுதி - கதிர்காமம்**
**வருமான வெளிப்பாடுகள்**

**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| உணவக விற்பனை | | 8,077,817.05 | 7,488,548.20 |
| கழி – விற்பனை செலவினம் | | 3,789,833.05 | 3,598,277.60 |
| **தேறிய வருமானம்** | | **4,287,984.00** | **3,890,270.60** |
| அறை விற்பனை | | 13,370,257.15 | 12,818,380.20 |
| ஏனைய வருமானம் | | 16,300.56 | 4,440.00 |
| **தேறிய இலாபம்** | | **17,674,541.71** | **16,713,090.80** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 11,013,117.09 | 10,478,502.08 |
| தேய்மானம் | | 3,346,910.97 | 1,341,918.00 |
| **மிகை / (குறைவு)** | | **3,314,513.65** | **4,892,670.72** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | | 3,464,002.62 | 3,384,596.08 |
| மேலதிக நேரம் | | 309,597.20 | 250,623.15 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 324,363.36 | 325,880.11 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 64,872.67 | 65,176.06 |
| ஊழியர் நலன் புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | | 276,045.07 | 343,067.00 |
| ஊழியர் உணவு | | 315,176.56 | 124,395.94 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | | 4,735.00 | 3,774.00 |
| ஊழியர் சீருடை | | 109,938.36 | 88,967.25 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | | 336,202.68 | 427,137.21 |
| பல்வகை வழங்கல் | | 244,036.60 | 268,261.80 |
| பாதுகாப்பு வழங்கல் | | 634,139.75 | 683,740.66 |
| சுத்திகரிப்பு கட்டணம் | | 756,781.95 | 751,881.31 |
| தொலைபேசி | | 128,793.92 | 114,921.51 |
| காகிதாதிகள் | | 129,954.20 | 75,835.80 |
| அச்சு மற்றும் வெளியீடு | | 53,140.00 | 47,780.00 |
| மின்சாரம் | | 1,862,128.57 | 1,652,341.98 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 30,312.54 | 20,961.71 |
| காப்பறுதி நிலையான சொத்து | | 2,813.63 | 2,821.34 |
| லொன்றி | | 362,228.93 | 295,779.23 |
| கட்டிடப் பராமரிப்பு | | 121,346.00 | 304,134.00 |
| உபகரணப் பராமரிப்பு | | 154,532.00 | 39,501.00 |
| வங்கிகட்டணம் மற்றும் பற்று வரி | | 4,500.00 | 6,340.00 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | | 73,992.44 | 99,920.36 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | | 9,280.00 | 8,730.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 166,765.00 | 178,680.00 |
| பொருளதார சேவை | | 14,795.77 | 20,203.12 |
| நீர் | | 1,058,642.27 | 893,051.46 |
| **மொத்தம்** | | **11,013,117.09** | **10,478,502.08** |

**விடுமுறை விடுதி - நுவரெலியா**
**வருமான வெளிப்பாடுகள்**
**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| உணவக விற்பனை | | 5,698,698.22 | 7,254,003.10 |
| கழி – விற்பனை செலவினம் | | 2,555,407.21 | 3,214,318.87 |
| **தேறிய வருமானம்** | | **3,143,291.01** | **4,039,684.23** |
| அறை விற்பனை | | 6,749,072.70 | 9,297,024.44 |
| ஏனைய வருமானம் | | 94,979.00 | 203,042.20 |
| **உப மொத்தம்** | | **6,844,051.70** | **9,500,066.64** |
| **தேறிய இலாபம்** | | **9,987,342.71** | **13,539,750.87** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 9,891,805.53 | 9,237,780.86 |
| தேய்மானம் | | 1,559,218.88 | 1,793,197.00 |
| **மிகை / (குறைவு)** | | **(1,463,681.70)** | **2,508,773.01** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | | 3,771,864.37 | 3,350,165.93 |
| மேலதிக நேரம் | | 305,918.60 | 321,790.44 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 365,268.05 | 329,833.06 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 73,053.61 | 65,966.59 |
| ஊழியர் நலன் புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | | 522,051.32 | 285,600.50 |
| ஊழியர் சீருடை | | 98,502.32 | 79,402.00 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | | 137,695.00 | 137,774.00 |
| பல்வகை வழங்கல் | | 247,360.10 | 288,416.50 |
| பாதுகாப்பு வழங்கல் | | 534,434.81 | 517,736.48 |
| சுத்திகரிப்பு கட்டணம் | | 644,025.80 | 529,935.40 |
| காகிதாதிகள | | 54,076.16 | 27,728.50 |
| தொலைபேசி | | 122,402.05 | 147,506.10 |
| தபால் மற்றும் முத்திரை | | 44,810.00 | 42,855.00 |
| மின்சாரம் | | 1,783,190.32 | 1,870,024.03 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 90,199.39 | 132,446.47 |
| காப்பறுதி நிலையான சொத்து | | 8,763.35 | 8,763.36 |
| லொன்றி | | 147,945.00 | 188,203.00 |
| கட்டிடப் பராமரிப்பு | | 302,575.10 | 89,150.30 |
| உபகரணப்பராமரிப்பு | | 95,442.80 | 232,000.00 |
| போக்குவரத்து வாடகை | | 13,450.00 | 11,650.00 |
| வங்கிக் கட்டணம் மற்றும் பற்று வரி | | 5,250.00 | 6,760.00 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | | 111,724.45 | 95,173.68 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | | 9,340.00 | 8,180.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 177,727.00 | 181,098.00 |
| நீர் | | 216,733.20 | 268,330.00 |
| பொருளதார சேவைக் கட்டணம் | | 8,002.73 | 21,291.52 |
| **மொத்தம்** | | **9,891,805.53** | **9,237,780.86** |

**விடுமுறை விடுதி - பண்டாரவெல**
**வருமான வெளிப்பாடுகள்**
**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| உணவக விற்பனை | | 8,472,821.10 | 8,367,151.85 |
| கழி – விற்பனை செலவினம் | | 3,552,806.22 | 4,019,846.42 |
| **தேறிய வருமானம்** | | **4,920,014.88** | **4,347,305.43** |
| அறை விற்பனை | | 7,577,322.20 | 8,390,219.45 |
| ஏனைய வருமானம் | | 324,051.00 | 387,040.02 |
| **உப மொத்தம்** | | **7,901,373.20** | **8,777,259.47** |
| **தேறிய இலாபம** | | **12,821,388.08** | **13,124,564.90** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 11,193,119.17 | 10,029,457.99 |
| தேய்மானம் | | 1,897,369.85 | 1,880,873.00 |
| **மிகை / (குறைவு)** | | **(269,100.94)** | **1,214,233.91** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | | 4,984,474.83 | 4,704,417.71 |
| மேலதிக நேரம் | | 312,970.12 | 293,513.10 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 452,195.66 | 453,429.90 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 90,439.13 | 90,685.98 |
| ஊழியர் நலன் புரி / உபசரனை செலவினம் - உள்நாடு | | 286,355.40 | 270,000.00 |
| ஊழியர் உணவு | | 493,746.42 | 129,097.24 |
| ஊழியர் சீருடை | | 183,966.09 | 98,532.50 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | | 147,218.75 | 94,712.25 |
| பல்வகை வழங்கல | | 166,482.00 | 130,332.00 |
| பாதுகாப்பு வழங்கல | | 646,567.37 | 679,192.13 |
| சுத்திகரிப்புக் கட்டணம் | | 558,813.53 | 515,496.72 |
| காகிதாதிகள் அச்சு மற்றும் வெளியீடு | | 35,166.50 | 43,592.15 |
| தொலைபேசி | | 106,722.53 | 120,317.69 |
| தபால் மற்றும் முத்திரை வரி | | 53,422.14 | 43,295.00 |
| மின்சாரம் மற்றும் எரிவாயு | | 1,496,342.41 | 1,374,292.29 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 9,600.48 | - |
| காப்புறுதி நிலையான சொத்து | | 4,358.05 | 4,358.06 |
| லொன்றி | | 199,606.00 | 218,695.75 |
| கட்டிடப் பராமரிப்பு | | 389,769.00 | 252,672.00 |
| உபகரணப் பராமரிப்பு | | 112,691.17 | 44,560.00 |
| போக்குவரத்துக் கூலி | | 12,100.00 | 14,150.00 |
| வங்கிக் கட்டணம் மற்றும் பற்று வரி | | 6,915.00 | 3,795.71 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | | 125,370.00 | 110,405.00 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | | 14,620.00 | 9,600.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 229,730.00 | 254,349.00 |
| நீர் | | 64,263.31 | 61,515.44 |
| பொருளதார சேவைக் கட்டணம் | | 9,213.28 | 14,450.37 |
| **மொத்தம்** | | **11,193,119.17** | **10,029,457.99** |

**விடுமுறை விடுதி - அநுராதபுரம்**

**வருமான வெளிப்பாடுகள்**

**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| உணவக விற்பனை | | 6,310,136.22 | 7,422,688.89 |
| கழி – விற்பனை செலவினம் | | 4,198,568.36 | 4,759,392.75 |
| **தேறிய வருமானம்** | | **2,111,567.86** | **2,663,296.14** |
| அறை விற்பனை | | 11,036,239.26 | 9,741,911.85 |
| ஏனைய வருமானம் | | 180.20 | 12.60 |
| **உப மொத்தம்** | | **11,036,419.46** | **9,741,924.45** |
| **தேறிய இலாபம்** | | **13,147,987.32** | **12,405,220.59** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 10,875,139.14 | 10,858,673.76 |
| தேய்மானம் | | 1,203,239.50 | 1,173,536.00 |
| **மிகை / (குறைவு)** | | **1,069,608.68** | **373,010.83** |

| | | |
|---|---|---|
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | 3,777,459.01 | 3,967,087.13 |
| மேலதிக நேரம் | 242,564.86 | 273,681.70 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 353,268.33 | 371,212.05 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | 70,653.67 | 74,242.42 |
| ஊழியர் உணவு / ஊழியர் நலன்புரி | 417,042.40 | 261,796.80 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | 2,438.00 | - |
| உபசரணை - உள்நாடு | 975.00 | 3,800.00 |
| ஊழியர் சீருடை | 120,227.90 | 96,552.50 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | 311,513.00 | 323,156.50 |
| பல்வகை வழங்கல் | 308,048.00 | 588,683.19 |
| பாதுகாப்பு கட்டணம் | 755,932.70 | 609,360.75 |
| சுத்திகரிப்பு கட்டணம் | 838,665.92 | 662,120.07 |
| காகிதாதிகள் அச்சு மற்றும் வெளியீடு | 64,388.30 | 92,532.95 |
| தொலைபேசி | 213,167.99 | 151,600.86 |
| தபால் மற்றும் முத்திரை | 46,940.00 | 46,255.00 |
| மின்சாரம் | 1,792,965.88 | 1,657,175.28 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | 183,132.84 | 120,245.96 |
| காப்புறுதி நிலையான சொத்து | 10,106.68 | 10,134.36 |
| லொன்றி | 269,328.50 | 252,546.50 |
| கட்டிடப் பராமரிப்பு | 303,201.16 | 590,633.38 |
| உபகரணப் பராமரிப்பு | 50,276.51 | 28,354.02 |
| போக்குவரத்துக் கூலி | 39,500.00 | 28,021.00 |
| வங்கிக் கட்டணம் மற்றும் பற்று வரி | 1,674.77 | 6,409.10 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு | 143,303.50 | 161,025.40 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 14,550.00 | 13,740.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | 184,542.00 | 166,220.00 |
| நீர் | 344,628.00 | 287,396.80 |
| பொருளதார சேவைக் கட்டணம் | 14,644.22 | 14,690.04 |
| **மொத்தம்** | **10,875,139.14** | **10,858,673.76** |

**விடுமுறை விடுதி - பென்தொட்ட**

**வருமான வெளிப்பாடுகள்**

**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| அறை விற்பனை | | 366,960.00 | 698,100.00 |
| வாடகை வருமானம் (காணி மற்றும் கட்டிட வாடகை) | | 25,617,127.00 | 25,607,512.27 |
| ஏனைய வருமானம் | | 4,109,715.83 | 4,992,523.34 |
| **உப மொத்தம்** | | **30,093,802.83** | **31,298,135.61** |
| கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம் | | 10,859,022.96 | 12,114,190.06 |
| தேய்மானம் | | 5,931,944.29 | 5,953,149.00 |
| **மிகை / (குறைவு)** | | **13,302,835.58** | **13,230,796.55** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | | 5,118,024.90 | 4,653,908.42 |
| மேலதிக நேரம் | | 215,846.58 | 208,606.54 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 502,151.50 | 475,830.66 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 100,430.30 | 95,166.14 |
| ஊழியர் நலன் புரி | | 475,625.00 | 429,300.00 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | | 11,442.00 | 8,725.00 |
| உபசரணை - உள்நாடு | | 38,863.13 | 13,426.16 |
| ஊழியர் சீருடை | | 229,815.32 | 349,338.76 |
| சுத்திகரிப்பிற்கான விநியோகம் | | - | 4,973.27 |
| பல்வகை வழங்கல் | | 120,343.10 | 392,741.05 |
| பாதுகாப்பு வழங்கல் | | 1,107,949.89 | 1,338,177.58 |
| காகிதாதிகள் | | 19,786.65 | 87,228.58 |
| தொலைபேசி | | 183,491.77 | 179,462.24 |
| தபால் மற்றும் முத்திரை | | 43,925.15 | 31,155.00 |
| மின்சாரம் | | 1,861,683.72 | 1,739,451.97 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 126,898.64 | 137,260.98 |
| காப்பறுதி நிலையான சொத்து | | 1,923.61 | 2,553.14 |
| லொன்றி | | 3,891.38 | 11,709.92 |
| காணி வாடகை | | 77,000.00 | 68,000.00 |
| கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் | | 71,395.20 | 1,053,637.88 |
| காப்புறுதி நிலையான சொத்து | | 38,075.00 | 111,220.00 |
| போக்குவரத்து வாடகை | | 178,952.00 | 346,150.00 |
| வங்கி கட்டணம் மற்றும் பற்று வரி | | 4,750.00 | 3,917.42 |
| வாகன பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு | | 51,061.00 | 104,475.00 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | | 23,203 | 19,180.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 231,188.00 | 209,394.00 |
| நீர் | | 3,000.00 | - |
| பொருளாதார சேவைக் கட்டணம் | | 18,306.12 | 39,200.35 |
| **மொத்தம்** | | **10,859,022.96** | **12,114,190.06** |

**விடுமுறை விடுதி - பொலன்நறுவை**
**வருமான வெளிப்பாடுகள்**
**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| கூலி வருமானம் | | 2,587,831.32 | 2,436,820.78 |
| ஏனைய வருமானம் | | 36,000.00 | 441,237.60 |
| **தேறிய வருமானம்** | | **2,623,831.32** | **2,878,058.38** |
| பொருளாதார சேவைக்கட்டணம் | | 1,611.56 | 3,615.12 |
| தேய்மானம் | | - | 847.00 |
| **மிகை / (குறைவு)** | | **2,622,219.76** | **2,873,596.26** |

**விடுமுறை விடுதி - கல்குடா**
**வருமான வெளிப்பாடுகள்**
**2013 டிசம்பர் 31 முடிவடைந்த கால எல்லைக்காக**

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வாடகை வருமானம் | | 4,637,890.00 | 2,685,180.00 |
| ஏனைய வருமானம் | | 4,511,718.45 | - |
| **உப மொத்தம்** | | **9,149,608.45** | **2,685,180.00** |
| **கழி – நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | 2,036,164.57 | 1,678,728.07 |
| தேய்மானம் | | 21,047,709.70 | 13,019,023.00 |
| **மிகை / (குறைவு)** | | **(13,934,265.82)** | **(12,012,571.07)** |
| **நிருவாக மற்றும் நிறுவன செலவினம்** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பணவு | | 1,221,081.24 | 789,260.00 |
| மேலதிக நேரம் | | 90,416.19 | 76,942.64 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 80,118.00 | 84,541.95 |
| ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு | | 16,023.60 | 16,908.19 |
| ஊழியர் நலன் புரி | | 59,700.00 | 62,350.00 |
| உபசரணை - உள்நாடு | | 1,785.00 | 460.00 |
| ஊழியர் சீருடை | | 19,332.08 | 14,450.50 |
| பல்வகை வழங்கல் | | 13,385.00 | 10,910.00 |
| பாதுகாப்பு வழங்கல | | 294,456.28 | 484,646.25 |
| காகிதாதிகள் | | 6,381.00 | 23,870.55 |
| தொலைபேசி | | 30,973.09 | 19,579.33 |
| தபால் மற்றும் முத்திரை | | 670.00 | 835.00 |
| மின்சாரம் | | 42,315.60 | 37,094.18 |
| கட்டிடம் - பராமரிப்பு | | 330.00 | 4,245.00 |
| போக்குவரத்துக் கூலி | | 112,000.00 | - |
| வாகனப் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு / எரிபொருள் | | 720.00 | 4,928.00 |
| சமூகமளிப்பு ஊக்குவிப்பு | | 44,670.00 | 44,350.00 |
| பொருளாதார சேவைக்கட்டணம் | | 1,807.49 | 3,356.48 |
| **மொத்தம்** | | **2,036,164.57** | **1,678,728.07** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்2/கே/எஸ்எல்ரீடிஏ/ 1/13/1 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2014 ஆகஸ்ட் 25

தலைவர்,

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்புடனான 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை 2014 ஏப்ரல் 23 ஆந் திகதியன்று அதிகாரசபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக தயாரிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறான தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டை தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000- 1810) இசைவாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிசார் கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

கீழே காணப்படும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| இலங்கை அரச கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நியமம் இலக்கம் 07 | ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றை மீள் மதிப்பீடு செய்வதாயின், குறித்த சொத்துத் தொகுதிக்குரிய சகல ஆதனங்கள் பொறித்தொகுதி, உபகரணங்கள் யாவும் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையின் சகல காணிகளையும் கட்டிடங்களையும் மீள மதிப்பீடு செய்யாது, தலைமை அலுவலகத்தின் காணிகளும் கட்டிடங்களும் மாத்திரம் 2008 ஆம் ஆண்டில் மீள மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையாக ரூபா 1,378 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஏனைய காணிகளும் கட்டிடங்களும் மீள மதிப்பீடு செய்யப்படாமையால் அதிகாரசபையின் |

| | |
|---|---|
| | காணிகளதும் கட்டிடங்களதும் நியாயபூர்வமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. |
| (ஆ) நியமம் இலக்கம் 07 | செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை அவற்றின் தன்மைக்கேற்ப குத்தகைக்கு கொள்வனவு வழங்குபவரின் நிலைமைக் கூற்றில் காட்ட வேண்டுமாயினும், செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதி அதிகாரசபையினது நிலைமைக் கூற்றில் காட்டப்படவில்லை. |
| (இ) நியமம் இலக்கம் 08 | அதிகாரசபைக்கு எதிராகவும் அதிகார சபையாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்ட சட்டபூர்வ விடயங்கள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக் கொணரப்படவில்லை. |

(i) சர்வதேச இந்திய சினிமா விருது வழங்கல் விழாவின் போது உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி என்பவற்றை வழங்கியமைக்காக 03 வெளி நிறுவனங்கள் ரூபா 32,980,555 இழப்பீட்டைக் கோரி அதிகார சபைக்கெதிராக நீதிமன்றங்களில் மூன்று வழக்குகளைத் தொடுத்திருந்தன.

(ii) சேவை நீகக்ம் செய்யப்பட்ட இரண்டு ஊழியர்கள் மற்றும் தங்குமிட வசதி வழங்கும் வரியிறுப்பாளர் ஒருவர் என்போரால் நிவாரணம்கோரி நீதிமன்றங்களில் மூன்று வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

(iii) அரச சொத்துத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக 13 நபர்களுக்கெதிராக அதிகாரசபையால் மூன்று வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

அதிகாரசபையின் நிதிசார் கூற்றுக்களினதும் கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களது நிதிசார் கூற்றுக்களினதும் மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாகக் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்புக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விபரம் | நிதிக்கூற்றின்படியான மீதி ரூபா | உப நிதி அறிக்கை விபரம் ரூபா | உப நிதி அறிக்கைப் பிரகாரமான மீதி ரூபா | வேறுபாடு ரூபா |
|---|---|---|---|---|
| இலங்கை மாநாட்டுப் பணியகத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை | 26,848 | இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் நிதி நிலைமைக் கூற்று | 58,115,407 | 58,088,559 |
| இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | 6,511,960 | இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்தின் நிதி நிலைமைக் கூற்று | 30,297,422 | 123,785,462 |
| இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவகத்திற்கு பெறவேண்டிய தொகை | 11,290,282 | இலங்கை ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தின் நிதி நிலமைக் கூற்று | 8,297,268 | 2,993,014 |

**2.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 2,050,954 தொகை 4 ஆண்டுகளுக்கு மேலாகவும் ரூபா 79,451 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டதும் 4 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் ரூபா 4,621,863 தொகை 01 ஆண்டிற்கு மேலாகவும் நிலுவை மீதிகளில் உள்ளடங்கியிருந்தன.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | தேய்மான முதலீடு (சுற்றுலாச் சபை) | 52,154,737 | (i) சான்றிதழ் அல்லது வேறு எழுத்து மூல ஆவணம் |
| (ஆ) | தேய்மான முதலீடு (சுற்றுலா மேம்பாடு) | 976,509 | (ii) மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (இ) | புதையல் நிதியம் | 759,021 | i. பங்குச் சான்றிதழ் அல்லது வேறு எழுத்து மூல ஆவணம் |
| (ஈ) | இலங்கை வரையறுக்கப்பட்ட ஹோட்டல் சுற்றுலாக் கம்பனி | 750,000 | ii. மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (உ) | வழங்கல் (பெருமளவிலான கருங்கற்கள்) | 1,067,850 | i. வழங்குனரைத் தெரிவு செய்யும் ஆவணம்<br>ii. வழங்குநர் சமர்ப்பித்த மாதிரிப்பட்டியல்<br>iii. பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்திய வாகன விபரம்<br>iv. வழங்குதலைப் பெற்றுக் கொள்ளும் உள்ளவாறான அறிக்கையும் செய்த |

வேலைகளுக்கான அறிக்கையும்

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெந்தோட்டை தேசிய விடுமுறைப் பணியக வளகாத்தின் வடக்கு எல்லையில் பெந்தோட்டை ஆற்றை அண்மித்த 15 ஏக்கர் காணி | - | சுற்றுலாச் சபையின் இணைந்த நிறுவனமான சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினது உரித்தல்லாது இருப்பதைக் குறிக்கும் எழுத்து மூல ஆவணம் |
| (எ) | வர்த்தக கடன்பட்டோர் | 20,641,412 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (ஏ) | சில்லறைக் கடன்பட்டோர் | 4,638,137 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| (ஐ) | நீர் நுகர்வுக் கடன்பட்டோர் (பாசிக்குடா) | 8,293,318 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) அத்தியாயம் 1 பிரிவு 12 (4) (iii) | தனியார் ஹோட்டல் ஒன்றிற்கு இலங்கை வங்கி வழங்கிய ரூபா 100 மில்லியன் கடனுக்குரிய வட்டியில் ரூபா 7,382,305 அதிகார சபையால் செலுத்துவதற்குக் குறித்த அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் பிரிவு 7(3) | மேற்படி கடனுக்கான வட்டியை அதிகார சபையால் செலுத்துவதற்கு 2010 ஜூன் 6 ஆந் |

| | | |
|---|---|---|
| | | திகதியன்று பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்தை அமுலாக்குவதற்குத் தேவையான பணிப்பாளர் சபையினது 5 அங்கத்தவர்களது பெருண்பான்மை இருக்கவில்லை. |
| (ஆ) | 1996 ஜனவரி 24 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டல் சுற்றறிக்கை | அரச காணிகளைக் குத்தகை வழங்கும் போது, குத்தகைக்கான உடன்படிக்கையுடன் குத்தகைப் பணம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தஞ் செய்யப்படவும் வேண்டும். அதிகார சபை குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகள் தொடர்பாக இச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | அத்தியாயம் 09<br>பிரிவு 9.3.1 (i) | ஆட்சேர்ப்பும் பதவி உயர்வும் பணிப்பாளர் சபையாலும் அமைச்சினாலும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒருமைப்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், "வன்ஸ்டொப் யுனிட்" எனும் பிரிவுக்கு ஆட்சேர்ப்பதில் இவ்வாறு நடைபெறவில்லை. |
| (ii) | அத்தியாயம் 9<br>பிரிவு 9.14.1 | மனிதவள முகாமைத்துவத்துக்கான சட்டங்களும் பிரமாணங்களும் தொடர்பான சகல விடயங்களும் அடங்கிய மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அத்தியாயத்துடன் கூடிய நடைமுறைக் கோவை திறைசேரிச் செயலாளரது இணக்கத்துடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், அதிகாரசபையானது அத் தேவைப்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நடவடிக்கைகளால் விளைந்த மிகை ரூபா 268,934,194 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 190,161,685 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 78,772,509 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதித் தீர்வை மற்றும் பிற வருமானம் என்பன ரூபா 93,112,758 ஆல் அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டின்போது அதிகாரசபையின் வருமானம் ரூபா 496 மில்லியன் ஆகும். அதன் முன்னைய ஆண்டின் ரூபா 408 மில்லியன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு ரூபா 21.5 சதவீதமாகக் காணப்பட்டது. அவ்வாறே, முன்னைய ஆண்டின் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் செலவாகிய தொகை ரூபா 217 மில்லியன் ஆகும், அதனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது செலவாகிய தொகை ரூபா 227 மில்லியன் ஆகும். இதற்கமைய, 4.6 சதவீதம் அதிகரிப்பு தென்பட்டது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) விடுதிகளின் செயலாற்றல்**

அதிகாரசபைக்குரியதும் அதன் முகாமைத்துவத்தின் கீழ் வருவதுமான 04 சுற்றுலா விடுமுறை விடுதிகள் மற்றும் 03 சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் 2012 ஆம் ஆண்டிற்கான நிகர மிகை ரூபா 13,605,316 ஆகும். இதனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான தேறிய மிகை ரூபா 4.642,129 ஆகும். மேந்தலைச் செலவினம் அதிகரித்ததன் காரணமாக மூன்று விடுமுறை விடுதிகளில் ரூபா 15,667,048 பற்றாக்குறை ஏற்பட்டமை மிகையில் குறையேற்படுவதற்கு அது பிரதான காரணியாக அமைந்தது.

**(ஆ) மீளாய்வாண்டில் அல்லது, இது வரையுமோ அதிகார சபைக்கு நிறைவேற்ற முடியாது போன இலக்குகளும் நோக்கங்களும்**

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தின் 1 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட இலக்குகளும் நோக்கங்களும் எய்தப்பறெவில்லை.

(i) நீண்டகால இலக்குகளும் நான்கு ஆண்டுத் திட்டமும் தயாரிக்கப்படுவது மற்றும் இலக்குகளை உள்ளடக்கும் நோக்குடன் சீரமைப்புச் செய்தலும் அதன் பொருட்டு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுதலும்

(ii) அதிகாரச் சட்டத்தில் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக விதிகளைத் தயாரித்தல், இதன் மூலம் சுற்றுலாத் துறையையும் அதனோடிணைந்த பிற கைத்தொழில்களுக்குரிய உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை முன்னேற்றுதல், அமுலாக்கல் மற்றம் பேணுதல் என்பவற்றிற்காக சுற்றுலா முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் அதிகாரமளித்தலும்

(iii) அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களை உயர்வடையைச் செய்யும் நோக்கில் வசதிகளை வழங்குதலுக்கான சாதாரண அல்லது பிற சபைகளை அமைத்தல்

(iv) இலங்கையில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு தாம் விரும்பிய இடங்களுக்குச் சுற்றுலா செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான வியாபாரங்களில் ஈடுபடல்

(v) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தின் IX அத்தியாயத்தின் பிரகாரம் சுற்றுலா முயற்சிகளையும் சுற்றுலாச் சேவைகளையும் பதிவு செய்தல் மற்றும் சுற்றுலாச் சேவைகள் சம்பந்தமான விலை, கட்டணங்கள், வீத அடிப்படை மற்றும் அறவீடுகள் என்பவற்றை முறைப்படுத்தல்.

### 4.2 முகாமைத்துவ விணைத்திறமையின்மை

---

**காணிகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) திருகோணமலை குச்சவெளி எனுமிடத்தில் அதிகார சபை சுவீகரித்த ஏறக்குறைய 510 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டு முடிவிலும் 50 ஏக்கருக்கும் குறைவான காணியே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்களது உரித்துறுதிகளை ஒப்படைத்தல். சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற விபரங்களைக் குறிப்பிடும் காணிகள் மற்றும் சொத்துக்களின் பொருட்டான பதிவேடு ஒன்று பேணப்படவில்லை.

(இ) 56 வாடி வீடுகள் மற்றும் 6.495 ஏக்கர் பரப்பளவிலான விளை நிலத்தை உள்ளடக்கிய 166 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்காக நிறுவனம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டபோதும், மீளாய்வாண்டு முடிவு வரை அவற்றின் ஒரு பகுதி மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெந்தோட்டே தேசிய விடுமுறைக் கேந்திர காணியில் உள்ள வராஹேன பிரதேசத்தில் சில இடங்களில் பெருமளவில் மணல் அகற்றப்பட்டிருந்ததுடன் விடுமுறை விடுதிக் காணியில் கழிவுகளை இடுதல் மற்றும் அத்துமீறிய நிர்மாண வேலைகள் என்பன நடைபெற்றுமிருந்தன. இச் சுற்றுலாப் பிரதேசத்தில் இவ்வாறாக நடைபெறும் அத்துமீறிய நடவடிக்கைகளைத் நிறுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 புலப்படக்கூடிய மோசடிகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) கல்பிட்டிய, ரொறையடித் துறைமுகத்தை நிர்மாணித்தல் மற்றும் வன்னிமுந்தல் களப்புக்கு அன்மித்த வீதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது,

(i) வர்த்தகச் சந்தைக் கூறு விலைக் கோரலின் கீழ், கருங்கற்களை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்குப் பதிலாக செயற்திட்டப் பணிப்பாளரது விருப்பிற்கேற்ப வேறொரு நபரிடமிருந்து 1648 கியூப் கருங்கற்கள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 824,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) கல்பிட்டிய வேலைத்தளத்திற்குக் கருங்கற்கள், கூழாங்கற்கள் மற்றும் ஏ.பீ.சி என்பவற்றை வழங்கியதாகக் குறிப்பிடப்பட்ட டிப்பர் இயந்திரத்தின் இயலளவு 3 கியூப் ஆகும். எனினும், 4 கியூப் வீதம் பொருட்கள் வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதால் கூடுதலாக வழங்கப்பட்ட ரூபா 2,549,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) அதிகாரசபையானது, பௌதீகரீதியாக பொறுப்பேற்காத 1648 கியூப் கருங்கற்கள், 368 கியூப் ஏ.பீ.சி, 40 கியூப் கூழாங்கள் என்பவற்றிக்கு ரூபா 10,196,000 கொடுப்பனவு செய்திருந்தது.

(ஆ) பெந்தோட்டை விடுமுறை கேந்திர பிரதேசத்தில் கழிவு முறைமையைப் பேணுவதற்கான தொழிளாருக்கான ஒப்பந்தம் பல ஆண்டுகளாக ஒரே நிறுவனத்திற்கு கொள்வனவு வழிகாட்டலுக்குப் புறம்பாக வழங்கப்பட்டிருந்தது. இதன்பொருட்டு அதிகாரசபை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 4,458,023 மற்றும் ரூபா 5,126,726 என அந் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்திருந்தது. அந் நிறுவனம் அதனை உப ஒப்பந்தக்காரருக்கு இரண்டு ஆண்டுகளில் அச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு ரூபா 2,976,000 உப ஒப்பந்தத்தில் வழங்கியதால் அதிகார சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 6,608,749 ஆகும்.

(இ) கதிர்காமம் சுற்றுலா விடுமுறை கேந்திரத்தில் 14 முதல் 44 வரையான இலக்கங்களையுடைய அறைகள் பழுதுபார்க்கப்பட்டதற்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ரூபா 29,195,802 தொகையில் ரூபா 11,089,228 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) கல்பிட்டிய மொறஹட்டுவாராம துறைமுக நிர்மாண வேலைகளுக்க டோசர் இயந்திரத்தை வழங்கியதாக வழங்குனர் சமர்ப்பித்த மூன்று கடிதங்களின் அடிப்படையில் 941.7 மணித்தியாலங்களுக்கு ரூபா 3,226,950 வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்த டோசர் இயந்திரத்தில் சேவை பெறப்பட்டமைக்காக நாளாந்தம் மாணி வாசிப்பு குறிக்கப்பட்டு வேலைக்கான மணித்தியாலங்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுதிப்படுத்தப்படாது இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் வேலைப்பரிசோதகரால் டிராக்டரின் சேவை திருப்திகரமாகப் பெறப்பட்டதாகக் மேற்படி மூன்று கடிதங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4.4 பயன்படுத்தப்படாத, குறைவாகப் பயன்படுத்தப்பட்டசொத்துக்கள்

பின்வருவன அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பஸ் வண்டி ஒன்று ரூபா 5,934,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் ரூபா 2,667,929 இற்கு பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது 2012 ஜுன் தொடக்கம் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை நட்டத்தில் ஈடுபடாமல் இருந்தது.

(ஆ) 1969 ஆம் ஆண்டில் சுற்றுலாத் கைத்தொழில்கள் இலங்கை சுற்றுலாச் சபைக்கும், பின்னர் சுற்றுலா அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட பெந்தோட்டை சுற்றுலா விடுமுறை விடுதிக்குரிய ஏறக்குறைய 94 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 வரை 50 ஏக்கர் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, 43 ஆண்டுகளுக்கு மேலாக 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணி செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிபில,ராகல, ஹொரவபொத்தானை, மஹியங்கனை. வீரகெட்டிய, பத்துலுஓயா, ஆகிய பிரதேசங்களில் உள்ள 7 விடுமுறை விடுதிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பாதுகாப்புப் பணிகளுக்கென ஏறக்குறைய ரூபா 3.508,415 வழங்கப்பட்டிருந்தது. எனினும், இவ்விடுமுறை விடுதிகள் ஆக்கபூர்வமாகப் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வருவன அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதிப் காணியில் பயிரிடப்பட்டுள்ள ஏறக்குறைய 600 இளநீர் மற்றும் தென்னங் கன்றுகளில் 2013 ஜுலை முதல் 6 மாதங்கள் தொடர்ச்சியாக தேங்காய், இளநீர் என்பன பறிக்கப்படாமையால் அதிகார சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 100,000 க்கு மேற்பட்டதாக இருந்தது.

(ஆ) பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதிக் காணியில் உள்ள 2880 சதுர அடிகளாவன கட்டிடப் பகுதி 2006 முதல் மீளாய்வாண்டு முடிவுவரை எதுவித பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இக் கட்டிடப் பகுதியின் 2006 ஆம் ஆண்டிற்கான மாதாந்த உழைப்பு ரூபா 20,000 ஆகும். அதற்கமைய, மதிப்பிடப்பட்ட மொத்த இழப்பு ரூபா 1,800,000 ஆகும்.

(இ) கல்பிட்டிய ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்திச் செயற்திட்டத்தை 30 அமெரிக்க மில்லியன் டொலருக்கு மேற்பட்ட வெளிநாட்டு நிதிச் செயற்திட்டமென வகைப்படுத்தி, சம்பளமும் படியுமாக ரூபா 3,780,253 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பில் உள்ள கலாசார நிலையக் கட்டிடம் (DUCTCH HOSPITAL) நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக்கு

வழங்கப்படுகையில் புத்தகப் பெறுமதியைவிட ரூபா 7,274,715 குறைவான பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) அதிகார சபைக்குச் சொந்தமான தேசிய விடுமுறை விடுதிப் பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு அதிகார சபையால் நீர் வழங்கப்பட்டுவருவதுடன் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நீர்மானி செயற்படாமையால் அதனைத் திருத்தி அமைத்து கட்டணத்தை அறவிடாது போனமையால் மதிப்பிடப்பட்ட இழப்பு ரூபா 8,415,400 ஆகும்.

## 4.7 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) பாசிக்குடா சுற்றுலா விடுதியில் மழை நீர் வடிந்து செல்வதற்கான வடிகால் முறைமையை அமைத்தல்.

(i) நிர்மாணச் செயற்திட்டம் நடைபெறும் காணியில் பூகற்ப வேறுபாடுகளைக் கருத்திற்கொள்ளாது நிர்மாண வேலை நடைபெற்றதால் வடிகாலில் நீர் தேங்கியிருந்தது.

(ii) அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளர் இச் செயற்திட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயலாற்றியதுடன், அவரால் இச் செயற்திட்டத்தின் ரூபா 31,394,813 இற்கான கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்பட்டுமிருந்தது. ஒப்பந்த அடிப்படையில் இச்சேவையை மேற்கொண்ட விடுதியின் உத்தியோகத்தரால் குறித்த கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்குரிய அளவீட்டு குறிப்பிடும் அறிக்கையையும் கொடுப்பனவு பட்டியலையும் பரீசீலித்து சான்றுறுதி செய்து கொடுப்பனவு உறுதிச் சான்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், அது அவரது பொறுப்பில் உள்ள வேலை அல்ல என அவதானிக்கப்பட்டது.

(iii) கணக்காய்வின் போது நிர்மாண வேலையானது பௌதீகரீதியாகப் பரீசீலிக்கப்பட்ட போது கணிப்பிடப்பட்ட உள்ளவாறான அளவைகளைக் குறிக்கும் அறிக்கைகளும் விலைப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுக் தொகையுடன் ஒப்பிடப்பட்ட செய்யப்பட்ட போது ஒப்பந்தகாரருக்கு ரூபா 3.792,420 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் "வன் ஸ்டொப்" முதலீடுகளை மேம்படுத்துவதற்கான இணைய தள நிர்மாணிப்பு ஒப்பந்தம்

I. இணைய தள நிர்மாண வேலைக்கு முன்கூட்டிய திட்டமோ அல்லது மதிப்பீடோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

II. தெரிவு செய்யப்பட்ட சேவை நாடுநருடன் எழுத்து மூல உடன்படிக்கை செய்யப்படாது, குறித்த பணி மாத்திரம் எழுத்துமூலம் அறிவிக்கப்ட்டிருந்தது.

III. ஒப்பந்தம் சம்பந்தமாக செயலாற்றல் பிணை முறி பெறப்படவில்லை.

IV 2014 ஜனவரி 6 இல் உள்ளவாறு இவ்வொப்பந்தம் தொடர்பாக ரூபா 699,300 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 செயற்திட்டத் தாமதம்

4.000 மேலதிக அறைகளுடன் விடுதியை நிர்மாணித்தல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றிக்கு ரூபா 5,521 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்பிட்டிய ஒருங்கிணைந்த சுற்றுலா செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்பிட்டிய ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்தி 5 ஆண்டுகளில் நிறைவு செய்வதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் தேசிய கொள்வனவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன 2008 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 டிசெம்பர் 31 வரை ஒரு அறையேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட அமுலாக்கல் திட்டம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவச் செலவினத்திற்கான ஆலோசனை மற்றும் மூலதன வேலை போன்றனவற்றை உள்ளடக்குமாறு விரிவான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இச்செயற்திட்டத்தின் கீழ் 12 தீவுகளை முதலீட்டாளருக்கு வழங்குவதற்கு அதிகாரசபைக்கு அதிகாரம் வழங்கியிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரை முதலீட்டாளருக்கு தீவுகள் மாத்திரமே வழங்கப்பட்டது

4.9 **மனிதவள முகாமைத்துவம்**

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 ஆகும். இதன் கீழ் வகைப்படுத்தப்பட்ட 192 பதவிகள் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளவாறான எண்ணிக்கைகள் முறையே 156 மற்றும் 154 ஆக இருந்தன.

5. **கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

5.1 **கூட்டிணைந்த திட்டம்**

2013 முதல் 2015 வரையான 3 ஆண்டுகளுக்குக் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் உருப்படிகளுக்காக இலக்கு குறிப்பிடப்படாதிருந்ததுடன், ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் எய்த வேண்டிய இலக்கு காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்படவுமில்லை.

5.2 **செயல் நடவடிக்கை திட்டம்**

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அச் செயல் நடவடிக்கைத்திட்டத்தில் கால எல்லை குறிப்பிடப்படவில்லை. செயல் நடவடிக்கைத் திட்ட நிறைவேற்ற முன்னேற்றம் காலரீதியாக பரீசீலிக்கப்படுவதற்கான நடைமுறையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.3 **உள்ளகக் கணக்காய்வு**

உதவிப் பணிப்பாளர் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரது தலைமையின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நடாத்திச் செல்லப்படுவதுடன் அப் பிரிவில் போதியளவு பதவியணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.4 **கொள்வனவுத் திட்டம்**

2006 ஜனவாரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கையின் 4.2.1 (பீ) இன் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது 13 விடயங்களது பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளவாறான எண்ணிக்கைகளுக்கிடையே 22 முதல் 100 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 5.6 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2011 ஆம் ஆண்டினது வருடாந்த அறிக்கை 2014 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
(ஆ) செயற்திட்ட முகாமைத்துவம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) கணக்கீடு

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*K/Y*